சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876,ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு ஆனி மாதம் 19-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 23-ம் இலக்கம்

பாத்திமா திருசேத்திர யாத்திரை

போர்த்துக்கால்என்றால் இலங்கைமக்களுக்கு அதைப்பற்றி விளக்கங்கொடுக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், அது இலங்கைச்சரித்திரத்துடன் என்றும் அழியாதவகையிலே இடம் பெற்றிருக்கிறது. ஆனால், அது உலகின் பெரும்பாலானநாடுகளில்—அநேக ஐரோப்பியநாடுகளில்தானும்நெடுங்காலமாகஅத்துணை பிரஸ்தாபமாய்அறியப்பட்டிருக்கவில்லை. ஆயினும், அந்நாட்டிலே பாத்திமாஎன்ற கிராமத்தில் பிள்ளைகள்மூவருக்குத் தேவதாயார் காட்சியளித்ததுமுதல் அதன்பிரஸ்தாபம் ஏறுபொழுதென ஏற்றமடைந்து கொண்டிருக்கின்றது.—அதனால், லூர்து திருப்பதிக் காட்சிகளின் நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டத்தைமுன்னிட்டு இவ்வருடத்திலே அத்திருசேத்திரஞ்செல்லும் யாத்திரிகர்களும், யாத்திரிகர் குழாங்களும் அதனைத்தரிசித்தபின் பொதுவாகப் போர்த்துக்காலுக்குச்சென்றுபாத்திமாதிருசேத்திரத்தையும் தரிசித்துத் திரும்புவது ஆச்சரியமன்று.

போர்த்துக்காலின் தலைநகர்

பாத்திமாவுக்குச்செல்லும் மிகப் பெரும்பான்மையான யாத்திரிகர்கள்அங்குபோகுமுன் போர்த்துக்காலின் தலைப்பட்டணமாகிய லிஸ்பன்நகரில் சில தினங்கள் தங்கிவிட்டுத்தான் அங்கிருந்தும் பாத்திமாவுக்குத் தங்கள்80மைல் தூரப்பிரயாணத்தைத்தொடக்குகிறார்கள். புராதனநாகரீகமும், புதியநாகரீகமும் கலந்துள்ள மனோகவர்ச்சிக்குரிய பலகாரியங்களையும் அந்நகரிலே அவர்கள் கண்டுகொள்ளுகிறார்கள். பொதுவிலே லிஸ்பன்நகர் ஐரோப்பாவிலுள்ள மிகவும் அழகுவாய்ந்த நகர்களில்ஒன்றாய்க் காட்சியளிக்கின்றது. அந்நகரிலுள்ள அநேக குன்றுகளில் ஒன்றிலே அர்ச். ஜோர்ஜின் புராதனகோட்டை ஒன்றைத் தரிசிகர்கள் கண்டுகொள்வார்கள். இதற்கு அண்மையிலே முன்னர் ஓர்மகமதிய பள்ளிவாசலாயிருந்த ஆசனக்கோவில் இருந்துவருகிறது. இந்தஆசனக்கோவில் அர்ச். அந்தோனியார்பிறந்த வீட்டைக் கொண்டுள்ள சிற்றாலயத்தை அடக்கியிருக்கின்றது.

லிஸ்பன்நகரிலும், போர்த்துக்காலின் ஏனையபகுதிகளிலும் அநேகவருடங்கள் செலவிட்டுள்ளவரான வண. ஜே. கனன் சுவாமியவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு ஈண்டு சுருக்கமாகத் தமிழாக்கஞ்செய்து தரப்பட்டிருக்கிறது.

இரு முக்கிய ஆச்சிரமங்கள்

பாத்திமாவுக்குச்செல்ல மிகவும்குறைந்தசலாரிலே மோட்டர்கார்களை வாடகைக்கு அமர்த்திக் கொள்ளலாம். அதிகமானயாத்திரிகர்கள் பாத்திமாப்பிரயாணத்துக்கென்று ஒவ்வோர்கூட்டமாகச்சேர்ந்து ஒவ்வோர்காரை வாடகைக்கு அமர்த்திக்கொள்வது தான் வசதியாகுமெனக் கண்டுகொள்ளுகிறார்கள். அவ்வாறு செய்வதால் தாங்கள்செல்லும் பாதையை இஷ்டமபோல அவர்கள் தெரிந்துகொண்டு, அப்பாதை நீளம் மனதைக்கவரத்தகும் சிலஇடங்களைக் கண்டுகொள்ளக் கூடியோராகின்றார்கள். அவர்கள் தங்கள்பிரயாணத்திலே தவறாதுகண்டுகொள்ள வேண்டியனவாய் இரண்டுமுக்கியமான இடங்கள் உள்ளன. அவற்றில்ஒன்று அல்கோபாக்கா எனுமிடத்திலே இருந்துவருகின்ற மிகப்பாரியதும், அழகுவாய்ந்ததுமான சந்நியாச ஆச்சிரமமாகும். இதனைச்சிறிதுவேளை தரிசித்துச் செல்வது, போர்த்துக்கேயசரித்திரத்தின் ஓர்பகுதியை யாத்திரிகர்களுக்குப் படிப்பிப்பதாயிருக்கும். பாத்திமா காட்சிகளின் சரித்திரத்துக்கு இது மேலும்ஆர்வத்தை உண்டுபண்ணுவதாகும்.

இளந்தலைவர் தோற்றுகிறார்

இந்தச் சந்நியாசஆச்சிரமத்துக்கு அஸ்திபாரம் இடப்பட்ட சம்பவம் 11-ம் நூற்றாண்டுக்கு நம்மைத் திரும்பக்கொண்டுசெல்லும். ஐபீரியன்குடா நாடென அறியப்படுகின்ற ஸ்பெயின், போர்த்துக்கால்முழுவதும் அப்போது மூரிஷியரெனப்படும் மகமதியரால் படையெடுத்து அடிப்படுத்திப் பாழாக்கப்பட்டுவந்தது. அச்சந்தர்ப்பத்தில் வடக்கே அபோன்ஸோ ஹென்றிக்கு வெஸ்என்ற ஓர் இளந்தலைவர் தோன்றினார். சேனைஒன்றைத் திரட்டிச்சுதந்திரப்போரில் இறங்கினார். திட்டஞ்செய்தபடி அவுறெம்எனுமிடத்திலே தீர்க்கமாக யுத்தத்தைத் தொடக்குமுன் அவர் ஓர்பிரதிக்கினை செய்துகொண்டார். அதாவது தமக்கு வெற்றிகிட்டுமானால் தேவதாயாருக்குத்தோத்திரமாகச் சந்நியாச ஆச்சிரமம்ஒன்றைக் கட்டுவதாக நேர்த்திசெய்துகொண்டார். அவருடையமன்றாட்டுக் கேட்கப்பட்டது. அவர் யுத்தத்தில் வெற்றியீட்டினார். அல்கோபாக்கா எனுமிடத்திலே இந்தச்சந்நியாச ஆச்சிரமத்தைக்கட்டிச்சிஸ்ரேர்ஷன் சபைச் சந்நியாசர்களிடம் ஒப்படைத்தார். இந்தஆச்சிரமத்திலே மரியன்னையின் தோத்திரத்துக்கும், புகழ்ச்சிக்குமாகத் தங்களை அர்ப்பணஞ்செய்த 999சந்நியாசர்கள் இருந்தார்கள்.

அரசராக முடிசூடுகின்றார்

இந்தயுத்தத்தின்பின் அபோன்ஸோ றொட்றிக்குவெஸ் போர்த்துக்காலின் அரசராக முடிசூட்டப்படுகின்றார். ஆனால், முடியைத்தரிக்க அவர் மறுத்துவிடுகின்றார். ஏனெனில், அந்தமுடி பரலோக இராக்கினிக்கே உரியதென்று அவர் திட்டமாகக்கூறுகின்றார். போர்த்துக்காலிலே புதியஅரசர்ஒருவர் அபிஷேகஞ் செய்யப்படும்போது தேவதாயாரின் திருச்சுரூபத்துக்கு முடிசூட்டும் இந்தவழக்கம் 1910-ம்ஆண்டுவரை நடைமுறையிலிருந்துவந்து, அதன்மேல் வேதவிரோதிகளால் முடியரசு கவிழ்க்கப்பட்டதும் இல்லாதொழிந்துவிட்டது. 1830-ம்ஆண்டு இந்தஆச்சிரமத்திலிருந்து சந்நியாசர்கள் துரத்தப்பட்டார்கள். தற்போது அதன் கோதிக்கமாதிரியான பெரியஆலயம் பொதுசன ஆராதனை வழிபாட்டுக்குப் பாவிக்கப்படுகிறது. ஆச்சிரமத்தின் ஓர் பகுதி அரசாங்கசிறைச்சாலையாய் இருந்துவருகிறது.

யுத்த ஆச்சிரமம்

பாத்திமாபதியை அணுகிக் கொண்டிருக்கும் வழியிலே அங்கிருந்து 15மைல் தூரத்தில் போர்த்துக்காலின் 'யுத்த ஆச்சிரமம்'என அறியப்படுகின்ற பற்றல்ஹா ஆச்சிரமம் இருக்கின்றது. இதுவும் ஓர்வெற்றியை ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கிறது. 15-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே போர்த்துக்காலின் சுதந்திரம் பலம்பொருந்திய அதன் அயல்நாடாகிய ஸ்பெயினாலே திரும்பவும் அச்சுறுத்தப்படலாயிற்று. அப்போது போர்த்துக்கேயபோர்வீரர்கள் "சந்தா மரியா" என்று யுத்தஆர்ப்பரிப்புச் செய்தார்களென்று சொல்லப்படுகிறது. அந்தயுத்தத்தில் வெற்றி நிச்சயமாகிவிட்டதெனக்கண்டதும் 5-வது ஜோவாவோஅரசர் அல்ஜூபொறோடராவின் யுத்தகளத்துக்குச் சமீபமாக இந்தச்சந்நியாச ஆச்சிரமத்தைக் கட்டித் தொமினிக்குவின்சபைக் குருமாரிடம் கையளித்தார். அவர்கள் தற்சமையம் முக்கியமாக லீறியாமேற்றிராசனம் இருந்துவருகிற போர்த்துக்காலின் பகுதிமுழுவதிலும் தேவமாதாவின் பக்தியை மனோற்சாகத்துடன் பரப்பினார்கள். 1917-ம்ஆண்டு தேவதாயார் காட்சியளித்த பாத்திமாவிசாரணைப்பங்கு இந்தலீறியாமேற்றிராசனத்தில்தான் இருந்துவருகிறது.

பாத்திமாவும் காட்சிகளும்

"பாத்திமா நாயகி" என்று நாம் அழைத்துவருகிறபோதிலும் காட்சிகள் அருளப்பெற்ற இடம் உள்ளபடியே பாத்திமா கிராமத்திலிருந்து ஏறக்குறைய இரண்டுமைல்தூரத்திலே இருக்கின்றது. கோவா டா ஈறியாவின் சிறியபள்ளத்தாக்கில்தான் மூன்றுபிள்ளைகளுக்கும் தேவதாயார்காட்சியளித்தார். இந்தப் பிள்ளைகளின் சொந்தக்கிராமம் பாத்திமாவிலும்பார்க்கஇன்னும் அதிகம்சிறியதாகும். பிரதான வீதியிலிருந்து ஏறக்குறைய ஒருமைல்தூரத்திலுள்ளது. அல்ஜூஸறெல்என்று அழைக்கப்படுகிறது. காட்சிகள்அருளப்பெற்ற காலமுதல் கோவா டா ஈறியா வைச்சூழவர ஓர்சிறியபட்டினம் உருவாகியிருக்கிறது. திருச்சபையால் முறைமைப்படி காட்சிகள் அங்கீகரிக்கப்பட்டுச் சிறிதுகாலத்தின்பின்னர் சமீபத்திலே காலஞ்சென்ற டொன் ஜோஸ் டா சில்வாமேற்றிராணியார் காட்சிகள் நடந்தேறிய மேய்ச்சல் நிலத்தையும், அயலிலுள்ளகாணிகளையுமே விலைகொடுத்துவாங்கி

(தொடர்ச்சி 8-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் தினவிழா

கடந்த 26-5-58அன்று கட்டை அடம்பன் பாடசாலை-கிராமம் இவற்றின்சரித்திரத்திலே பொன்அட்சரங்களால் எழுதப்படத்தக்க ஓர்நன்னாளாகும். மாணவர்களும், பெற்றோரும் தங்கள்காலத்திலே என்றும்கண்டுகேட்டிராத பெற்றோர்தினவிழா முதன்முதலாக இங்குநடைபெறும்சுபகாலைமிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். அன்று திருப்பலியோடு விழாஆரம்பமாயிற்று. கட்டளைக்குரவர் வண. ஏ. மூஜேசுவாமியவர்கள் நிறைவேற்றிய திவ்வியபூசையில் என்றுமில்லாதவாறு அநேகபெற்றோர் பங்குபற்றித் திருவிருந்தருந்தினர்கள்.

பின்னர் மாலை 6-30மணிக்குப் பெற்றோரும், அயற்கிராமங்களிலிருந்து வந்த திரளானமக்களும், ஆசிரியர்களும்ஒன்றுசேர வண. கட்டளைக்குரவர் மாலைசூட்டி வரவேற்கப்பட்டு உயர்மேடையில்அமரவே, அவர்தலைமையில் விழாஆரம்பமாயிற்று. மாணவிகள் வந்தனப்பாக்கள்பாடிச்சபையோரைமகிழ்வித்தனர். தலைமைஆசிரியர் திரு. பி. இராயப்புஅவர்களால்பாடசாலைஅறிக்கைவாசிக்கப்பட்டது. அதிலே 1950-ம் ஆண்டு பாடசாலைஆரம்பமான காலந்தொடக்கம் இன்றுபதிவுபெற்றவரை அதற்காகஉழைத்துவந்த — வருகின்றமகாவக். மேற்றிராணிஆண்டவர், அதிவண. முகாமைக்காரர்சுவாமியார், கட்டளைக்குரவர்கள், ஆசிரியர்கள்எல்லோருக்கும் நன்றிதெரிவிக்கப்பட்டது. கற்கடந்தகுளம் கத்தோலிக்கபாடசாலைத் தலைமைஆசிரியர் திரு. மரியாம்பிள்ளை அவர்கள் பேசியபோது, "தற்போதையத் தலைமைஆசிரியர் இப்பாடசாலையைப் பதிவுபெற்றபாடசாலையாக்கி அதன்வளர்ச்சிக்காகச் செய்துள்ள சேவைகளையும்,பெற்றோர்அவர்மட்டில் கொண்டிருக்கும் அன்பையும், நன்மதிப்பையும் பாராட்டினர். மேலும் இவ்விழா இங்குகொண்டாடப்படுவது, பெற்றோர் பாடசாலைமட்டில்காட்டும் ஏகோபித்தஒற்றுமையைத் தலாம்பரமாக எடுத்துக்காட்டுகிறதென்றும், எதிர்காலத்திலும் இத்தஒற்றுமை வளர்ந்துவர வேண்டுமென்றுங்கூறிப் "பெற்றோர்கடமை"என்னும் விடயம் பற்றிச் சிறந்த ஓர்சொற்பொழிவாற்றினர்.

சுவாமியவர்கள் தமதுதலைமைஉரையில் "என்றைக்குமே தாம்கண்டிராத விதமாகப் பெற்றோர்இன்று திவ்விய பூசைப்பலியிலும், திருவிருந்திலும், இறுதியில் இவ்விழாவிலும் பங்குபற்றியதையிட்டுத் தாம் மிகவும்மகிழ்ச்சியடைவதாகவும், இதற்கெல்லாம் காரணமாயிருந்த பெற்றோர்தினவிழாவை இச்சிறியகிராமத்திலேயும் நடத்துவதற்கு இத்தஆசிரியர்கள் துணிந்தமையைத் தாம்பாராட்டுவதாகவும்கூறி நன்றிதெரிவித்தார். மேலும், பிள்ளைகளைப்பெற்று அவர்களுக்கு உணவும், உடையும் அளிப்பதோடு பெற்றோரின் கடமை முடிந்துவிடவில்லையென்றும், அவர்களைநேசித்து, அவர்களின் ஆன்ம வளர்ச்சியையும், அறிவுவளர்ச்சியையும் முக்கியமாகக் கவனிக்கவேண்டுமென்றும், அதற்குவழிகாட்டியாயுள்ள பாடசாலையையும், அதன் ஆசிரியர்களையும் அபிமானித்து ஒத்துழைக்க வேண்டுமென்றும்கேட்டுப் பெற்றோர்-ஆசிரியர்என்ற விடயம்பற்றிச் சிறந்த புத்திமதி புகட்டினர்.

தொடர்ந்து சபையோருக்குக் குதூகலம்ஊட்டும் நடனங்கள், பைலாவிளையாட்டுகள், சிரிப்புச்சம்பாஷணைகள், ஆங்கிலசம்பாஷணைகள் இடையிடையே நடைபெற, யேசுநாதர் செய்த முதற்புதுமை, குடிகாரனின் மதிகேடு, அகந்தையின்அழிவு ஆதியசம்பவங்கள் சிறப்பாக மாணவர்மாணவிகளால் நடித்துக் காட்டப்பட்டன. ஈற்றில், தலைமை ஆசிரியரின் நன்றியுரையுடனும், பாப் பரசர்கீதத்துடனும், சிற்றுண்டிஉபசரணையுடனும் விழா இனிதே நிறைவேறிற்று.

— நிருபர்

மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

முதல் நன்மை: கிறீஸ்துவவாழ்வில் ஓர்சுபதினம். திவ்விய இரட்சகராகிய யேசுக்கிறீஸ்துநாதர் புத்தம்புதிய இருதயமலர்களில் வீற்றிருக்கப்போகும் உயரியதினம். 15-5-58 வியாழக்கிழமை. அன்று கர்த்தர் பரலோகத்துக்குஆரோகணமானஅரியதினம். நமது பரிசுத்தவியாகுலமாதா ஆலயமணிகள் இன்பநாதஞ் செய்து ஆர்ப்பரித்தன. எமதுபங்கைச்சேர்ந்த சிறுவர், சிறுமியர் புத்தாடைஅணிந்து புனிதகோலத்தோடு பெற்றோர், பெரியோர், உற்றோர், உவந்தோர் புடைசூழ ஆலயத்துள்சென்று குழுமினர். ஏழுமணியானதும் கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமிகள் பூசைப்பரிசாரகர் புடைசூழ, வெண்ணிறமலர்களின் நன்மணம் கமழ்ந்துகொண்டிருந்த பலிபீடத்திலே பாடற்பூசை நிறைவேற்றினர். பூசையின்போது புதுநன்மை பெறப்போகும் பிள்ளைகளினதும், கூடியிருந்த ஏனையோரதும் உள்ளங்களை உணர்ச்சிவசப்படுத்தும் ஓர்அரியபிரசங்கஞ்செய்து, திவ்வியயேசுவைப் புதுஉள்ளங்களின் விருந்தாக்கினர். முடிவில் புதுநன்மை பெற்ற பிள்ளைகள்அனைவரும் குருமனை சென்று கட்டளைக்குரவரின் ஆசியும், அன்பளிப்பும் பெற்றுத் தங்கள் பெற்றோர், சுற்றத்தவரோடு தத்தம்இல்லம் சென்று அங்காளை நன்னாளாகக் கொண்டாடினர். பிற்பகல் தங்கள் ஞானஸ்நான வார்த்தைப்பாட்டைப் புதுப்பித்து, மாதாவின் சின்னத்தை அணிந்துகொண்டனர்.

அமரதின நினைவு: நமது பங்குப் பெண்கள்பாடசாலையில் ஆசிரியத் தொண்டாற்றும் திருமதி தெரேசா பிரான்சிஸ்அவர்களின் தாயாரான திருமதி செசிலியாநல்லம்மா சாமுவேல் அவர்களது மூன்றுவது ஆண்டு அமரதினநினைவு சென்ற 20-5-58 - இல் வந்துபோனது. அன்றுகாலை 6மணிக்குப் பங்குத்தேவாலயத்தில் கட்டளைக்குரவர் ஓர் துக்கப்பாடற்பூசை நிறைவேற்றி மேடையை ஆசீர்வதித்தார். அன்று இப்பகுதியிலுள்ள சந்நியாசர், கன்னியர், வயோதிபர் தாபனங்களில் காலஞ்சென்றவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக வேண்டுதல்கள் நடந்தேறின.

பூசைப்பரிசாரகர்சபை: நமது பங்குத்தேவாலயத்தையும், பலிபீடத்தையும் பரிமளிக்கச்செய்யும் பூசைப் பரிசாரகர்களாகிய எம்பங்குச்சிறுவர்கள் ஒவ்வோர்சனிவாரமும் காலை 8-30 மணிக்குத் தங்கள்கூட்டத்தைக் கூட்டுவர். இச்சபையின் வருடாந்தபொதுக்கூட்டம் சென்ற 17-5-58 சனிவாரம் காலை 8-30 மணியளவில் கட்டளைக்குரவர் தலைமையில் நடந்தேறியது. புதுவருட உத்தியோகஸ்தரின் தேர்தலிலே சபைத்தலைவராகச் செல்வன் ஏ. ஜே. கனகசிங்கம் தெரியப்பெற்றார். உபதலைவராகப் பி. ஏ. யோசெவ், காரியதரிசியாக எஸ். கே. ராசா, பொக்ஷாதிபராக இ. யோசெவ் என்பவர்கள் தெரியப்பெற்றனர். பின்னர் புதியஅங்கத்தினர் சேர்க்கப்பட்டனர். அடுத்துவரும் 24-5-58 சனிவாரம் ஓர்உல்லாசப்பிரயாணம் செய்வதாகத் தீர்மானித்தபின் கூட்டம் இனிதே கலைந்தது.

உல்லாசப்பிரயாணம்: 24-5-58 சனிவாரம். அன்றுகாலை பூசைப்பரிசாரகர்கள் அனைவரும் திவ்வியபூசை கண்டனர். காலைஉணவின்பின் குருமனையில் ஒன்றுகூடினர். கட்டளைக்குரவர்தலைமையில் மாதாவின் ஆசியை இரந்து தங்கள் உல்லாசப் பிரயாணத்தை ஆரம்பித்தனர். எமதுபங்கைச் சேர்ந்ததும், மட்டக்களப்புவாவியின் அண்மையிலுள்ளதும், இயற்கை அழகு நிரம்பப்பெற்றதுமான கொக்குவில்எனும் கிராமத்தைநோக்கி உல்லாசசல்லாபங்களோடு அணிவகுத்து நடந்தனர். இவர்களில் மிகவும் இளைஞராகியசிலர் கட்டளைக்குரவரது மோட்டர்வாகனத்தில் பிரயாணத்தை நடத்தினர். ஆங்கு முந்திரிகை, ஈஞ்சு, தென்னை, மா, பலா, வாழை முதலியனசூழ்ந்து, இனிய தென்றல் மெல்லெனத் தவழ்ந்துகொண்டிருந்த காவொன்றில் பகற்பொழுதினைக் கழிக்கத்தொடங்கினர். சிறிதுஇளைப்பாறிக் குளிர்பானங்கள் பருகினர். வழமையான தங்கள்கூட்டத்தை அழகியசூழ் நிலையில், கட்டளைக்குரவர் தலைமையில் புதியஉத்தியோகஸ்தர் புடைசூழ நடாத்தினர். பின்னர் இயற்கைவளங்களைக் கண்டுகளித்தனர். ஆடினர். பாடினர். மந்திகள்போல மரக்கொம்புகளில மாறினர். கிளைக்குக்கிளைதாவினர். முந்திரிகைப்பழங்களையும், ஈச்சம்பழங்களையும் விரும்பி உண்டனர். கட்டளைக்குரவரும் அவர்களில் ஒருவராக விளையாட்டுகளில்கலந்து அவர்களை மகிழவைத்தனர். ஈற்றில் மதிய விருந்தினை மகிழ்ந்துஉண்டனர். சிறிதுவேளை இளைப்பாறிவிட்டுத் தத்தம் விருப்பிற்கேற்றவாறு மிகச் சந்தோஷகரமாக விளையாட்டுகளில் ஈடுபட்டு மாலைப்பொழுதைக் கழித்துச் சிற்றுண்டிஅருந்தினர். ஆவனபுரிந்தார்க்கு நன்றியுரைகூறிச் சந்தோஷத்துடன் உல்லாசப்பிரயாணத்தை முடித்துக் கட்டளைக்குரவரை வாயாரவாழ்த்தி அவரதுஆசிபெற்றுத் திரும்பினர். சுபம்!

— நிருபர்

பல தேசங்களில்

ஸ்ரார்துபதியும், பாத்திமாவும், ஆஸ்திறேலிய யாத்திரிகர்களும்

சிட்னிநகர் அதிமேற்றிராணியாரான கருதினால் கிலறேய் ஆண்டவரின் தலைமையிலே ஆஸ்திறேலிய யாத்திரிகர்கள் 700 பேர் ஸ்பானியதேசஞ் சென்று அங்கே மதிரித்நகரில் ஜெனறல் பிறங்கோ அவர்களைச் சந்தித்தபோது, அவர் பெருமகிழ்வுடன் அவர்களைவரவேற்றுப் பேசியவிடத்து: "விரித்தகரங்களுடன் நான்உங்களை வரவேற்கின்றேன்; சிலவருடங்களின் முன் பார்சலோனுபட்டணத்தில் நடந்தேறிய அந்தமறக்கமுடியாத சர்வதேச சற்பிரசாதமகாநாட்டிலே கருதினல் ஆண்டகைஅவர்களைச் சந்திக்கும் கௌரவத்தைப் பெற்றிருக்கிறேன்; போர்த்துக்காலானது, உடலிலும் உளத்திலும் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கும் நமதுஉலகத்துக்குத் தமது அன்பின்செய்தியைப் பாத்திமாவிலிருந்துவிடுக்கத் தேவதாயாரால் தெரிந்துகொள்ளப்பட்ட நாடாகும்; ஆனால், தேவதாயார் எண்ணிறந்தசிறப்புப்பெயர்களுடன் அறியப்பெற்று, நமது அந்தரங்கமுயற்சிகள் எல்லாவற்றுடனும், நமதுசரித்திரத்தின் அரும் வீரச்செயல்கள் யாவற்றுடனும் சம்பந்தப்பட்டுள்ள ஓர்நாடாகிய ஸ்பெயினில் நீங்கள்தற்போது நிற்கின்றீர்கள்; கடந்த ஓர்நூற்றாண்டாகத் திரும்பத்திரும்பச் செய்யப்பட்டுவருகின்ற விசுவாச புதுமையைக் கண்ணுற்று மாதாவை வணங்குவதற்காக லூர்துபதிக்குச் செல்லும்வழியிலே இப்போது நீங்கள் இருக்கின்றீர்கள்" எனக் கூறலாயினர். இந்தஆஸ்திறேலிய யாத்திரிகர்கள் பாத்திமாவைத்தரிசித்தபிற்பாடு மதிரித்நகர்வழியாக லூர்துபதிசென்றார்கள்.

● பதினெண்குலட்சம் போர்வீரர்களைக்கொண்ட சீனஇராணுவம்ஒன்று சமீபத்திலே 500 துப்பாக்கிகள், 13,000ரூத்தல்களுஞ்சூட்டப்பட்டதானியங்கள், 5,000பெட்டிபட்டாசுகளைக் கொண்டு அங்குகன்ரன்மாகாணத்திலே சிட்டுக்குருவிகள்மீது ஓர்பலத்த தாக்குதல்நடத்தியது. இதன்விளைவாய் மூன்றுலட்சம் சத்துராதிச் சிட்டுக்குருவிகள் கொல்லப்பட்டன. அவற்றின்காற்பதினாயிரம்கூடுகள் கைப்பற்றப்பட்டன. கம்யூனிஸ்தபயிர்கள் மீது படையெடுத்ததே சிட்டுக்குருவிகளாகும்.

இத்தாலிய ஸ்ராலின்கிருட்

"இத்தாலிய ஸ்ராலின்கிருட்" என்று அழைக்கப்படுகின்ற பெரிய கைத்தொழிற்பயிற்சி நிலையம்ஒன்று இத்தாலியதேசசெஸ்ரோசான்ஜியோவாண்ணிநகரிலே பெரும்கைத்தொழில் சமுதாயங்கள் வழங்கிய பணத்தைக்கொண்டும், அரசாங்ககடன் உதவியைக்கொண்டும் அமைக்கப்பெற்றுச் சமீபத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இதனைச் சலேசியன்சபைக்குருமாரே நடத்திவருவார்கள். செஸ்ரோசான்ஜியோவாண்ணிநகர் பலவருடங்களாகக் கம்யூனிஸ்த முனிசிப்பல்சபை ஆட்சியின்கீழ் இருந்துவருகிறது. இத்தநிலையத்தைஅமைக்க ஐந்துவருடங்கள்பிடித்தன. இது அமைக்கப்படுவதைக்காண வெகுவாக ஆசித்திருந்தவர் மிலான்நகரின் முன்னாள் அதிமேற்றிராணியாரான கருதினல்சூஸ்தர்ஆண்டவரே. இத்தநிலையத்தில் 650 மாணவர்கள்வரையிலே தொழில்நுட்பக் கல்விப்பயிற்சி அளிக்கப்படுவார்கள். தனதுயந்திரசிற்பசாலைகளுடனும், இரசாயனபயிற்சிச் சாலைகளுடனும் ஓர்கோவிலையும், பாலர்பாடசாலை ஒன்றையும் இது கொண்டிருக்கிறது. ரூஷியாவிலே லெனின்கிருட்நகர் பெரியகைத்தொழிற்பயிற்சி நிலையங்களைக்கொண்டது.

● பதினைந்துநாடுகளைச்சேர்ந்த 35,000 பேருக்கு மேற்பட்ட யுத்தவீரர்கள் தங்கள் குடும்பங்களுடன் இம்மாதம் 14-ந் திகதிமுதல் 16-ந் திகதிவரை நடைபெற்றுள்ள சர்வதேச இராணுவத்தினரின் லூர்துபதி யாத்திரையில் கலந்திருக்கின்றார்கள். இந்தயாத்திரை இவ்வருடத்தில்லூர்துபதியைத் தரிசித்துள்ள மிகப்பெரிய தனிப்பட்டயாத்திரைக்குழுவாகும்.

● 1956-ம்ஆண்டின் சுதந்திரஎழுச்சிக் கலகத்தின்போது ஏறக்குறைய 20,000 ஹங்கேரியர்கள் யூகோசிலேவியாவுக்குத் தப்பியோடினர்கள். இவர்களில் 16,374 பேர் 27நாடுகளில் தற்போது குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். ஐக்கியஅமெரிக்கதேசம் இவர்களில்முதற்பெருந்தொகையாக 2,509 பேரையும், பிரான்ஸ் 2,455 பேரையும், கனடா 1,765 பேரையும், ஆஸ்திறேலியா 1,500 பேரையும் ஏற்றியிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரமிழந்த அமெரிக்க கருதினல் காலஞ்சென்றார்

சிக்காகோநகர் அதிமேற்றிராணியாரும், சமீபத்திலே விசுவாசப்பரப்புதல் திருச்சங்கத்தின் பதிற்தலைவராக நியமனஞ்செய்யப் பெற்றவருமான கருதினல் சாமுவேல் ஸ்றிற்ச்ஆண்டவர் சிலவாரங்களின்முன் தமதுவலதுபுஜம் சத்திரவைத்தியமூலம் துண்டிக்கப்பெற்றதைத் தொடர்ந்து பிரமிக்கத்தக்கவிதமாய்ச் சுகப்பட்டு, பின்னர் திடீரென வைகாசிமாதம் 26-ந்திகதி திங்கட்கிழமைஇரவு ரோமாபுரியிலே காலஞ்செல்லலாயினர். ஏற்கனவே தெரிவித்துள்ளவாறு, திருச்சபையின் வேதபோதகநாடுகளுக்கெல்லாம் பொறுப்பாயிருந்துவருகின்ற திருச்சங்கத்தின் பதிற்தலைவராகக் கருதினல் ஸ்றிற்ச்ஆண்டவர் நியமனஞ்செய்யப் பெற்றமையைக் கத்தோலிக்க உலகமுழுவதும் மனமுவந்து வரவேற்கலாயிற்று. ரோமாபுரிக்கூறியாவுக்கு நியமனஞ்செய்யப்பெற்ற முதலாவதுஅமெரிக்ககருதினல் இவரே.

சென்றசித்திரைமாத இறுதியிலே ரோமாபுரிக்குச்செய்தகப்பற்பிரயாணத்தின்போது 70வயதுடையவரான கருதினல் ஸ்றிற்ச்ஆண்டவரது வலதுபுஜத்தின் பிரதானஇரத்தநாடியில் திடீரென இரத்தவோட்டம் தடைப்படலாயிற்று. அதனல் அவர் ரோமாபுரிபோய்ச்சேர்ந்ததும் அவருடையவலதுபுஜம் சத்திரவைத்தியமூலம் துண்டிக்கப்படலாயிற்று. அதனைத் தொடர்ந்து அவர் பிரமிக்கத்தக்கவகையிலே தீவிரசுகமடைந்து முன்தியஞாயிற்றுக்கிழமை திவ்வியபூசைதானும் நிறைவேற்றக்கூடியவராஞர். ஆயினும் அடுத்தவாரம் எதிர்பாராதவிதமாக இரத்தஞ்சிரசில் அடித்துப் பக்கபாரிசவாதமுண்டு வருந்தலாயினர். அவருக்குச செவ்வாய்க்கிழமை பரிசுத்தபாப்பரசரின் விசேஷ ஆசிர்வாதத்துடன் அந்தியதேவதிரவிய அனுமானங்கள் அருளப்படலாயின. பின்னர் சரியாய்ஒருவாரத்தின்பின் அவர்மரணமடையலாயினர்.

கருதினல்ஸ்றிற்ச் ஆண்டவர் இறந்தபின் அவரின்சரீரம் பொன்முலாமிட்டபேழைஒன்றில் வைத்து, அவரின் அதிமேற்றிராசனநகரமாகிய சிக்காகோநகரிலே அடக்கஞ்செய்வதற்காக ரோமைநகரிலிருந்து ஆகாயவிமானமூலம் ஐக்கியஅமெரிக்கதேசத்துக்குக் கொண்டுபோகப்படலாயிற்று. அவ்விமானத்தில் ஒன்பதுகுருசிரேஷ்டர்களும், அவர்மரித்தபோது அவருடன் இருந்தஅவரதுசுற்றத்தவர்களும் சென்றார்கள். வத்திக்கான்இராச்சியமந்திரிகாரியாலயத்தைச்சேர்ந்தமொன்சிஞ்ஞோர் பயஸ் பெனின் காலாசுவாமியார் பரிசுத்தபிதாவின் பிரதிநிதியாகச் சேமச்சடங்குக்குச் சமுகமளிக்குமாறு அவ்விமானத்தில்சென்றார்.

கருதினல்ஆண்டவரின்சரீரம் சிக்காகோநகர் ஆசனக்கோவிலிலிருந்து நகரின்மவுண்கார்மேல் சேமக்காலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட விதியின்இருமருங்கும் சுமார்50,000மக்கள் வரிசையாய்நின்று கடைசிமரியாதைசெய்தார்கள். ஆசனக்கோவிலில் நிறைவேறிய துக்கப்பாடற்பூசையின்போது ஐனதிபதி ஐஸன்ஹாவரின் பிரதிநிதியாகத் தொழில்மந்திரியான திரு.ஜேம்ஸ்மிக்செல்அவர்கள் சமுகமாயிருந்தார்.

ஆகாயவிமானம் ரோமைநகர் ஆகாயவிமான நிலையத்திலிருந்து புறப்பட்டபோது, 50இத்தாலியவிமானிகள் அணிவகுத்துநின்று மரியாதைசெய்தார்கள். கருதினலின்சரீரம் ரோமாபுரியிலிருந்துகொண்டுபோகப்படுமுன் அவரின்ஆன்மஇளைப்பாற்றிக்காக அங்குள்ள 17-ம்நூற்றாண்டைச்சேர்ந்த அர்ச். இஞ்ஞாசியாரின்கோவிலில்நிறைவேறிய துக்கப்பாடற்பூசையின்போது, கோவிலில்குழுமியிருந்த நூற்றுக்கணக்கானகுருமார், கன்னியாஸ்திரிமார், ஆயிரக்கணக்கான சாதாரணகத்தோலிக்கரின்மத்தியில் பதினறுகருதினல்மாரும் இருந்தார்கள். இந்தக்கருதினல்மாருள் காலஞ்சென்ற கருதினல் ஸ்றிற்ச்ஆண்டவர் பதித்தலைவராயிருந்து துணைச்செய்யவிருந்த விசுவாசப்பரப்புதற் திருச்சங்கதலைவரான 84வயதுடைய கருதினல்புமாசோனி பயொந்திஆண்டவரும் ஒருவராயிருந்தார்.

பாத்திமாநாயகி திருச்சுரூபத்தின் சமாதான திருயாத்திரை

பாத்திமாநாயகியின் யாத்திரைத்திருச்சுரூபம்ஒன்று வாஷிங்ரனைச்சேர்ந்த சியற்றிள்நகரிலிருந்து சென்றபங்குனிமாதம் 1-ந்திகதியன்று உலகத்தைச்சுற்றி ஆகாயமார்க்கமாய்யாத்திரையாகப் புறப்படலாயிற்று. தபஞ் செய்யவேண்டுமென்றும், தினமும் செபமாலை சொல்லிவரவேண்டுமென்றும் தேவதாயார் செய்தவேண்டுகோளைப் பரப்பும் ஓர்சின்னமாகப் பிரயோகிக்கப்பெற்ற இந்தச் சுரூபம் தனது உலகசமாதான யாத்திரையைச் சித்திரைமாதம் 26-ந்திகதி முடிக்கலாயிற்று. சியற்றிள்நகரிலிருந்து சமாதான யாத்திரையாகப் புறப்படுமுன் இந்தச்சுரூபம்அங்குள்ள சந்தியாகப்பரின் ஆசனக்கோவிலில்வைத்துத் திரிதின ஆராதனை நடத்தப்படலாயிற்று. அதில் பிரசங்கஞ்செய்த வண. பற்றிக் மூர்சுவாமியாரே அதனை அதன்நீடிய உலகயாத்திரைக்கு எடுத்துச்செல்லலாயினர். இந்தச் சுரூபத்தை இவர் 1948-ம்ஆண்டு வைகாசிமாதம் 13-ந்திகதியன்று பாத்திமாபதியில்பெற்று, ரோமாபுரிகொண்டுசென்று, அங்கே பரிசுத்தபாப்பரசரின் கரத்தால் அதனையும், அதன் சமாதான தூதையும் ஆசிர்வதிப்பித்தார். அதுமுதல் இந்தச்சுரூபம் மூன்றுலட்சம் மைலுக்குமேல் பிரயாணஞ்செய்திருக்கிறது. ஆகாயவிமானமார்க்கமாய் உலகத்தைச் சுற்றிநடத்தியுள்ள பிரயாணத்திலே இச்சுரூபம் ஹனலூலுவில் முதன்முதலாகத் தங்குவதாயிற்று. அதன்மேல் இந்தியாவில் இருஇடங்களிலும், மற்றும்கிழக்குநாடுகளிலும் ரோமாபுரி, பாத்திமாமுதலாமிடங்களிலும் தங்கியுள்ளது.

———

தையற்காரரான சந்நியாசியார்

"எயின்சியேடெல்லின் தையற்காரர்"எனப் பிரஸ்தாபமாக அறியப்பட்டுவந்தவரும், அர்ச். ஆசீர்வாதப்பர் சபையைச்சேர்ந்த ஓர் சாதாரண சந்நியாசியாருமான பிறதர் மெயின்ரூட் ஈயுக்ஸ்றருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளும்விஷயமாய் அவரதுபுண்ணியங்களின் வீரத்துவம்பற்றிக் கலந்து விவாதிப்பதற்காகச் சமீபத்திலே திருச்சடங்காசார திருச்சங்கம் கூடியது. பிறதர் மெயின்ரூட் 1848-ம் ஆண்டு பிறந்தார். ஓர்இளைஞராய் இருந்தபோது ஓர் நெசவுதொழிற்சாலையிலும், ஓர் சாய்ப்பிலும்வேலைசெய்தார். பின்னர் சுவிற்சர்லாந்திலுள்ள எயின்சியேடெல்ன்நகர்சென்று 1874-ம் ஆண்டு அர்ச். ஆசிர்வாதப்பர் சபைமடத்தில் ஓர்சாதாரண சந்நியாசியாராகி அம்மடத்தின் தையற்காரராகத் தமது 30 வருடகாலப் பணியைத்தொடக்கினர். பொறுமைக்கும், தாழ்மைக்கும், ஆழ்ந்த செபப்போக்குக்கும் ஓர் மேல்வரிச்சட்டமாக விளங்கிய இவர் 1925-ம்ஆண்டுஆனிமாதம் 25-ந்திகதி காலஞ்சென்றார். இவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படுவதற்கான விசாரணை 1946-ம்ஆண்டு தொடக்கப்பட்டது.

கிறீஸ்துநாதரது மரணவஸ்தையின் ஞாபக சர்வதேச ஆலயம்

கிறீஸ்துநாதர் கடைசிஇராப்போசனத்தின்பின் மேற்சாலையிலிருந்து வெளிகொண்டு செதிரோன்என்ற சிற்றாற்றைக்கடந்து தமதுசீஷர்களுடன் ஜெத்செமனிய தோட்டத்தில் பிரவேசித்தார். இன்று இந்தப்புனிதமான தலத்தில் நன்குபாதுகாக்கப்பட்டுவரும் குகைஒன்று இருந்துவருகிறது. இதுதான் கிறீஸ்துநாதரை யூதாஸ்முத்தமிட்டுக்காட்டிக் கொடுத்தஇடமென்று கொள்ளப்படுகிறது. இந்தத்தோட்டத்தின் மற்றேர்பகுதியிலே நமது திவ்வியகர்த்தரது மரணவஸ்தையின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட முதலாவது பலிபீடக்காளன்ற மகாதேவாலய அத்திவாரங்களின்மேல் சர்வதேசஆலயமாக 1921-ம்ஆண்டு அர்ப்பணஞ்செய்யப்பெற்ற அதிகம்பிந்திய புதிய ஆலயம் நிறுவிநிற்கின்றது. இதன்மேற்கூரை பன்னிருசிறிய 'டோம்'களால் — அதாவது வில்மாடங்களால் ஆக்கப்பட்டிருக்கிறது. இத்திருசேத்திரத்தைக் கட்டியெழுப்புதற்குப் பணம்உபகரித்த கிறீஸ்துவநாடுகளைக் கௌரவப்படுத்துமுகமாக இந்தவில்மாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன்தூமிரவர்ண—அதாவது, கருஞ்செங்நிற யன்னல்களிலிருந்து விசாலமான உட்புறத்தின்மேலாகச் சுடரொளிபரந்துவியாபிக்கின்றது. பலிபீடமானது மரணவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கும் கிறீஸ்துநாதரின் சலவைக்கற் சுரூபம்ஒன்றால் துலங்கிக்கொண்டிருக்கிறது. இந்த ஆலயம் லத்தீன்பாஷையில் ஆராதனைவழிபாடுநடத்தும் கத்தோலிக்கரால்மாத்திரம் உபயோகிக்கப்படுகிறது. சவக்கடற்பள்ளத்தாக்கிலிருந்து பரிசுத்தநகரை நோக்கிச்செல்லும் அகன்றபெருவீதியின் முற்பக்கமாகவுள்ள பெரிய தலைவாயில் மாடமுழுவதும் சலவைக்கல்லால் அமைந்து, கிறீஸ்துநாதர் தமதுதிருப்பாடுகளைத் தம்முடையபிதாவுக்கு ஒப்புக்கொடுக்கும் பாவனையாகக் காட்சியளிக்கின்றது.

பிரான்சிஸ்கன்சபைக் குருமாரின் கண்காணிப்பிலே இருந்துவருகின்ற ஜெத்சேமனியதோட்டமும் விசேஷகவர்ச்சிக்குரியதாய் இருந்துவருகிறது. ஏனெனில், புடைப்புகளைக் கொண்டனவாய் அங்குநிற்கும் எட்டு ஒலிவமரங்கள் கிறீஸ்துநாதர் மரணவஸ்தைப்பட்டவேளையிலே அங்கு நின்ற அதேமரங்களென்றுசொல்லப்படுகிறது.

தற்சமையம் பழுதுபார்க்கப்பட்டுவருகின்ற திருக்கல்லறை மகாதேவாலயத்தில் கிறீஸ்துநாதரின் திருக்கல்லறை இருக்கின்றது. திருக்கல்லறைக் கதவானது பதிந்ததும், ஒடுங்கியதுமாய் அங்குள்ள இருசிறிய அறைகளிலும் முதலாவது அறையில் கொண்டுபோய் விடுகின்றது. வெளிஅறை சம்மனசானவரின் சிற்றாலயமென்று அழைக்கப்படுகிறது. ஏனெனில், சற்றுமுன்னரே புரட்டிவிட்ட கல்லின்மேல் உட்கார்ந்திருந்த ஆண்டவருடைய தூதன் அங்குதான் கிறீஸ்துநாதர் உயிர்த்தெழுந்த சுபசெய்தியைத்தெரிவித்தார். இந்தஅறையின்மத்தியிலுள்ள ஆதாரபீடம் அக்கல்லின் சிறுதுண்டுஒன்றை அடக்கியிருக்கிறது. இன்னும் அதிகஞ்சிறிய கதவுஒன்று அடுத்துள்ளசிற்றாலயத்தில் — கிறீஸ்துநாதரின் சிற்றாலயத்தில் கொண்போய்விடுகின்றது. இந்தச்சிறிய அறையில் பார்க்கக்கூடியதெல்லாம், கிறீஸ்துநாதரின் திருச்சரீரம் வைக்கப்பட்ட கற்பாறையை மூடியிருக்கும் சலவைக்கற்பலகைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருத்தொண்டன்"
சந்தாதாருக்கு வேண்டுகோள்

அவசரகால நிலைமையின் நிமித்தம் உங்கள் முகவரியில் மாற்றம் ஏற்பட்டிருந்தால், தயவுசெய்து உங்கள் புதுவிலாசத்தை எமக்குத் தாமதமின்றித் தெரிவியுங்கள்.

திருத்தொண்டன் முகாமைக்காரர்,
மேற்றிராசன இல்லம்,
யாழ்ப்பாணம்.

ஆனி மாதம்

பொதுக் கருத்து: இக்கால இன்னல்களிடையே மக்கள் யேசுவின் திருஇருதய நேசத்தில் தங்கள்நம்பிக்கையை வைக்கும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன் கருத்து: அராபியநாடுகளில் நீதியும், சமாதானமும் நிலவும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்திய வேத
பாதுகாவலன்
1958-ம் ஆண்டு
ஆனி மாதம் 19-ந்திகதி

இத்தாலியும் பிரான்ஸும்

இத்தாலிய பொதுத்தேர்தல் ஒருவாறு முடிவடைந்துவிட்டது: அதிலே பரிசுத்த பாப்பரசரையும், கத்தோலிக்கதிருச்சபையையும் இல்லாதபொல்லாத வசைமொழிகளாலும், பொய்புரட்டுகளாலும் மிகமோசமாக எதிர்த்துத் தேர்தலில் போட்டியிட்ட கம்யூனிஸ்தகட்சியும், ஓர்காலம் கம்யூனிஸ்தர்களுடன் தோழமை பூண்டிருந்து பின்னர்அதிலிருந்து பிரிந்துபோய் அத்துடன்நியதியற்ற நட்புக்காண்பித்துவரும் நென்னிய சோஷலிஸ்தகட்சியும் எதிர்பார்த்து மனக்கோட்டை கட்டியிருந்தபடி வெற்றிபெற முடியாமற்போக, இத்தாலிய கிறீஸ்துவஜனநாயககட்சியோ பொதுத்தேர்தலுக்கு முன்னிருந்ததிலும் அதிகபலம்வாய்ந்த கட்சியாக இன்றுதலையெடுத்து நிற்கின்றது. கிறீஸ்துவ ஜனநாயககட்சி 1953-ம்ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலிலும் சுமார் 17 லட்சம் வாக்குகளை அதிகமாகப்பெற்றுச் சனப்பிரதிநிதிகள்சபையிலே முன்னர் தனக்கிருந்த 263 பிரதிநிதிகளுக்குப்பதில் 276 பிரதிநிதிகளைப்பெற்றுத் தனதுபலத்தை அதிகமாக்கியிருக்கிறது. செனற் சபையிலும் அது 124 ஸ்தானங்களை—அதாவது 11 ஸ்தானங்களை முன்னிலும்கூடுதலாகப் பெற்றிருக்கிறது. அதனால் இத்தாலியிலே நாற்பத்தொன்றுக்கும், நாற்பத்திரண்டிற்கும் இடைப்பட்ட சதவிகிதமான வாக்குகளைக் கிறீஸ்துவ ஜனநாயககட்சிக்கு இத்தாலியமக்கள்கொடுத்து இரண்டாவது உலகயுத்தம் முடிந்தகாலமுதல் செய்ததுபோல ஆளுங்கட்சியாயிருக்க அதற்குத் தத்துவத்தை அளித்திருக்கிறார்கள். கிறீஸ்துவஜனநாயககட்சிக்கு அடுத்தபடியாகக் கம்யூனிஸ்தகட்சி சனப்பிரதிநிதிகள் சபையிலே 143 அங்கத்தவர்களையும், செனற்சபையிலே 60 அங்கத்தவர்களையும் கொண்டிருக்கிறது. அடுத்தபடியாகக் கம்யூனிஸ்த கட்சியுடன் முன்னர் நட்புக்கொண்டிருந்து தற்சமையம் அத்துடன் வழுவழுத்த நட்புக்கொண்டுள்ள நென்னிய சோஷலிஸ்தகட்சி தற்போது சனப்பிரதிநிதிகளசபையிலே 84 அங்கத்தவர்களையும், செனற் சபையிலே 35 அங்கத்தவர்களையும்கொண்டிருக்கிறது. அதனால், கிறீஸ்துவ ஜனநாயககட்சியானது வேகவிரோதிகளும், எதிர்க்கட்சிகளும் கடந்தபல மாதங்களாகக் கோடையிடி முழக்கம் போன்று செய்துவந்த கோரகண்டனங்கள், எதிர்ப்பிரசாரங்கள் மத்தியிலே தனதுஎதிரிகள் காத்திராதவிதமாகப் பெருவெற்றி ஈட்டியிருக்கின்றது. நிற்க,

இரண்டாவது உலகயுத்தத்தின்பின் பிரான்ஸ் இதுவரை எத்தனையோ நியதியற்றஅரசாங்கங்களைக் கண்டுவிட்டது. அல்ஜீரிய பிரச்சினையால் அதன்கௌரவமே மங்கிப்போய்விட்டது. புற்றீசல்கள்போன்ற எண்ணிறந்த குட்டிஅரசியற்கட்சிகளால் நாட்டின்ஐக்கியமே குலைந்துபோய்விட்டது. இதற்கெல்லாம் காரணம், அதன்கட்டுப்பாடற்ற அரசியற்சட்டமே காரணமாகும். அம்மம்ம! ஓர்காலம் ஐரோப்பாவுக்கே ஜனநாயக அரசியல் முறையைக் கற்றுக்கொடுத்த பிரான்ஸ் இன்று ஜனநாயக ஆட்சியின் நியதியற்றதன்மைக்கு ஓர்எடுத்துக்காட்டாக விளங்குவது என்னபெரும் விபரீதம்! இரண்டாவதுஉலகயுத்தம் முடிந்தபின் கடந்தபத்துவருடகாலத்திலும் எந்தப்பிரான்ஸிய பிரதமராவது ஒன்றரைவருடங்களுக்குமேல் பதவிவகித்ததே கிடையாது. யுத்தத்துக்குப்பிறகுஉண்டான 27-வது பிரான்ஸியமந்திரிசபையும் சமீபத்திலே வீழ்ச்சியடைந்துவிட்டது. அதன்பாராளுமன்றத்திலே சிலலறை அரசியற்கட்சிகள்பல தனித்துஇயங்குவதும், எந்தத் தனிக்கட்சிக்கும் பூரணபெரும்பான்மை இல்லாதிருந்துவந்திருப்பதுமே அதன் நியதியற்ற — ஸ்திரமற்ற நிலைமைக்குக்காரணமன்றி வேறொன்றுமல்ல. அரசியல்நெருக்கடிகள், அல்ஜீரியகுழப்பங்களாலே பிரான்ஸில் உள்நாட்டுக்கலகம் ஒன்று தலைகாட்டுமோவென்ற அச்சமுதலாய் எழுந்துகொண்டிருந்த கலவரமான ஓர்காலத்திலே பழையஇராசதந்திரியான ஜெனறல் தே கோல்அவர்கள் பிரான்ஸிய பிரதமராகவந்திருப்பது ஓரளவில் அதற்குநம்பிக்கையூட்டுவதாய் இருக்கின்றது. இவர்பிரான்ஸிலேநியதியற்றஅரசாங்கங்களுக்கு நிலைக்களமாய் இருந்துவருகின்ற அரசியற்சட்டத்தை அடியோடுமாற்றவேண்டுமென இன்றுமேற்றல்ல, ஆரம்பத்திலிருந்தே அழுத்தமாகக் கூறிவந்திருக்கின்றார். இதனைப் பிரான்ஸியமக்கள் அனேவரும் சாதாரணமாக ஒப்புக்கொள்ளுகின்றார்கள். கம்யூனிஸ்தர்களின் பரமவிரோதியான ஜெனறல் தே கோல்அவர்கள் பிரான்ஸிய அதிகாரபீடத்தை எதிர்பாராதவிதமாய்க் கைப்பற்றியிருப்பதிலிருந்து அந்நாட்டுக்கு நல்லகாலம் பிறந்திருக்கிறதெனவே நம்புகின்றோம்.

சபிக்கப்பட்டவர்களே நம்மைவிட்டு.....

(சி. எஸ். நாயகம் — பத்தாவத்தை, இளவாலை)

சர்வேசுரன் நம்மை எதற்காகஉண்டாக்கினார்? எதற்காக நம்மைஉண்டாக்கி உலகில்வைத்திருக்கிறார்? நமது ஆத்தும தேட்டத்திற்கும், மோட்சவாழ்விற்குமாகவே. அதனால் நாம் உலகில் உயிர்வாழ்வதற்குவேண்டிய உலகஆஸ்திகளையோ, பொருள்பண்டங்களையோ தேடப்படாது, அனுபவிக்கப்படாதுஎன்பது அர்த்தமல்ல. நன்முகத்தேடலாம், தேடிக்குவிக்கலாம், அனுபவிக்கலாம். ஆனால், உலகபற்றுகளும் தேட்டங்களும் தேவநீதிக்கும், மனச்சாட்சிக்கும் கட்டுப்பட்டிருப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கவேண்டும். "பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலன்றி அவன்ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டான்"(அரு. 3: 27) என்பதும், "என்உதவியின்றி உங்களால் ஒன்றும் செய்யமுடியாது" (அரு. 15: 5.) என்பதும் தேவவாக்குகள். எனவே, நமது கைகால்களின் உதவியில்லாது நாம் ஏதொன்றை எடுக்கவோ, ஒருஅடிதானும் நகரவோ முடியாததுபோன்று, நாம்இரவு பகலாய்ப் பத்துவிரலும் பதறஅடித்து நெற்றியியர்வை நிலத்திற்சிந்த என்னதான் பாடுபட்டாலும் கடுகுமணிபோலும் ஓர்சிறிய நன்மையைத்தன்னும் தேவஒத்தாசையின்றி நாம்கண்டடைய முடியாதென்பது வெள்ளிடைமலை.

ஒருநாள் அர்ச். இராயப்பரும், அவரது உடன்தொழிலாளிகளும் தங்கள் படகுகளிலே மீன்பிடிக்கப்புறப்பட்டார்கள். கடலில் மச்சங்களைப்பிடிக்க அவர்கள் எத்தனையோதரம் வலைகளை வீசிப் பிரயாசப்பட்டும் அத்தனைதரமும் மருந்துக்குத்தானும் ஒன்றும் அகப்படவில்லை. அதனால் அவர்கள் மனஞ்சலித்தவர்களாய் அதிருப்தியோடும், ஆயாசத்தோடும்கரையைநோக்கி வந்துகொண்டிருக்கையில் அங்கேகரையோரத்தில் உலாவிக்கொண்டுநின்ற திவ்வியகர்த்தர் அவர்களின் பிரயாசைக்கிரங்கி அவர்களைநோக்கி: "உங்கள்வலைகளைப் படகின்வலதுபக்கத்தில் வீசுங்கள்"என்றார். அதற்குஇராயப்பர் அவரைநோக்கி, "ஆண்டவரே! நாங்கள் இந்தஇரவெல்லாம இராக்கண்விழித்து அரும்பாடுபட்டும் ஒருமச்சந்தானும் அகப்பட்டதில்லை; ஆயினும், தேவரீருடைய வார்த்தையின்படியே வலையை வீசுவேன்" என்றுசொல்லி அவ்வண்ணம்செய்துவலைகிழியக்கூடிய வகையிலே அகப்பட்ட மீன்களின் மிகுதியினாலே அவைகளை இழுக்கமாட்டாமல் மற்றவர்களின் உதவியோடும், மிகுந்தகஷ்டத்தோடும் இழுத்துக் கரைசேர்ந்தார். இந்தப்புதுமையைக் கண்டதும் அவர்கள் தங்கள்படகுகள் இரண்டும் ஆழக்கூடியவகையில் அகப்பட்டிருந்த பெருமச்சங்களை அந்தப்படியே கரையில்விட்டுவிட்டு அவரைப் பின்சென்று தங்கள்ஆத்தும ஆதாயத்தை—மோட்சவாழ்வைக் கண்டடைந்து இன்றுதிருச்சபையிலே பெரிய அப்போஸ்தலராகக் கொண்டாடப்படுகின்றனர். ஆகவே, தேவானுக்கிரகமின்றி நமதுசொந்தவல்லமையால் எவ்வித ஆன்ம, சரீரநன்மைகளையும் நாம் கண்டடையமுடியாது. தேவன்இரங்கித் தங்களுக்குக்கொடுத்தமச்சங்களையெல்லாம் அவர்கள்கைவிட்டு, தங்கள் ஆன்ம இரட்சணியத்துக்கு அவைகளைப்பயன்படுத்தி மோட்சமுடிபெற்றதுபோல நாமும் தேவன்திருவுளங்கனிந்து நமக்குத்தரும் உலகநன்மைகளை—சரீரகொடைகளை நமதுஆன்ம இரட்சணியத்துக்கு உதவியாகப் பயன்படுத்தி மோட்சமுடிபெற முயன்றுவரவேண்டும்.

ஆனால், நமதுசீவியத்திலே நாம் கண்கூடாக காண்பதென்ன? எத்தனையோபேர் தங்கள்செல்வம், செல்வாக்கையெல்லாம் அவற்றைக்கொடுத்தருளிய தேவனுக்கு விரோதமாகவும், பிசாசுக்குச்சார்பாகவும், தங்கள்ஆன்ம ஈடேற்றத்துக்குக் கேடாகவும் துன்மார்க்கங்களிலே விரயஞ்செய்கிறார்கள். குடிவெறி, சூதாட்டம், சிற்றின்பசுகபோகம், மற்றும் இவைபோன்ற பலஅதர்மமான காரியங்களிலே முன்பின்யோசனையின்றிச் செலவுசெய்து நரகபாதையில் முன்னேறிச்செல்லுகிறார்கள். ஓர்நன்மையானகாரியத்துக்கோ, ஞானகாரியத்துக்கோ, கோவில் திருப்பணிக்கோ, திருநாள்பெருநாளுக்கோ யாதும்கேட்கப்போனால் கேள்விக்குமேல் கேள்வி செங்கல்அடுக்குமாப்போல் அடுக்கடுக்காய்க்கேட்டுக்கொண்டு போவார்கள். இன்னும்சிலர் கோவிற்பூனைகள். கோவிலைக்கட்டவோ,சோடிக்கவோ, சுத்தமாக்கவோ முன்னணியில்நிற்பார்கள். நல்ல சாதுக்கள். ஆனால், பாவசங்கீர்த்தனம், தேவநற்கருணைமுதலிய தேவதிரவியஅனுமானங்களைப் பெறவேண்டிய கடமையை நிறைவேற்றுவதிலோ வருடக்கணக்கிலே தவணைபோட்டுக்கொண்டு போவார்கள். கோவில்பணிவிடைகள்செய்வது சிறந்தகாரியந்தான். ஆனால், இதிலும் மேலானகாரியம் பாவசங்கீர்த்தனம், தேவநற்கருணை முதலிய தேவதிரவிய அனுமானங்களைத் தவறுதுபெற்றுவருவதாகும். மனுஷரை ஏமாற்றலாம். ஆனால், தேவனை ஏமாற்றமுடியாது. ஏனெனில், அவர்ஏமாற்றப்படக்கூடியவருமல்ல.

நிற்க, நம்மெல்லோருக்கும் ஓர்ஆத்துமமும், சரீரமுமஉண்டு. இரண்டும் ஆண்டவரின் சொத்துகள். இவைகளைச் சர்வேசுரன் நம்ஒவ்வொருவரினதும் பொறுப்பில்—கையில் விட்டிருக்கிறார். இவைகளைநாம் மீண்டும்அவர்கையில் மோட்சவாழ்வுக்கென்று ஒப்படைக்கவேண்டியவர்கள். நமதுஆத்துமத்தையும், சரீரத்தையும் இரட்சித்துக்கொள்வதற்காகவே அவர் உலகநன்மைகளையும், ஞானநன்மைகளையும் நமக்குத் தந்திருக்கிறார். உலகநன்மைகள்என்றால் என்ன? சுகம், பலம், செல்வம், செல்வாக்குஎன்பன. ஞானநன்மைகள்எண்ணில்என்ன? திருச்சபையில்ஏற்படுத்தப்பட்டிருக்கும் தேவதிரவியஅனுமானங்களும், பிறவுமாகும். இந்தலௌகிக, வைதீகநன்மைகளை நமதுஇரட்சணியத்துக்கென்று தக்கவாறு பயன்படுத்திக்கொள்வோமானால் நாம் அதிர்ஷ்டசாலிகளே. ஆனால், இவைகளைத் தூர்ப்பிரயோகம் செய்வோமானால் நாம் பெரும் நிர்ப்பாக்கியர்களே. நித்தியத்துக்கும்கெட்டுப்போனவர்களே. (வளரும்)

● உலகில் கம்யூனிஸ்தர்கள் அதிகமாக வெறுக்கும் ஒரேயொருவல்லரசு அமெரிக்காஅல்ல, ஆனால், பிரித்தானிதான்; ஏனெனில், சுதந்தரத்தின் கொள்கைகளை உலகமுழுவதும் பரப்பியநாடு பிரித்தானியேஎன்று பிரித்தானிய கன்சர்வேற்றிவ் கட்சியின்தலைவரும், பிரபுக்கள்சபையின் தலைவருமான ஹெயில்ஷாம்பிரபு கூறுகின்றார்.

● ஆஸ்திரியதேச இன்ஸ்பிறக் நகரிலே வருகிறஆடிமாதம் 26-ந்திகதியன்று குருப்பட்டம்பெறவிருக்கின்றவண. பிறதர்மாட்டீன் தமதுமுதற் பூசைப்பலியைத் தலையான நாலிய தலைவர்களில் ஒருவராயிருந்துகாலஞ்சென்ற தமதுதந்தையான திரு. மாட்டீன் போர்மனின் ஞாபகார்த்தமாக ஒப்புக்கொடுக்க விருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ஸ் பிலோமினு

பெரிய ஓர்ஆஸ்பத்திரியின் 'வாட்' ஒன்றிலே அழகியவாலிபர்ஒருவர் மரணத்தருவாயில் பிராணவஸ்தையுற்றுப் பேச்சுமூச்சின்றிக் கிடக்கின்றார். நகருக்குவெளியே நாற்சந்திஒன்றில் முதனாள்இரவு உண்டான பயங்கர விபத்துஒன்றில் அகப்பட்டுப் பலத்த காயங்களுடன் இவர் அங்குகொண்டு வரப்பட்டார். ஓர்குன்றின் பாதைவழியாகச் செலுத்தப்பட்டுவந்த லொறி ஒன்று சாரதியின்கைபிடிதவறிக் கீழே வேகமாய் ஓடிச்சென்று இந்தவாலிபர் செலுத்திப்போன காரில்மோதிக் கொள்ளவே, இவர்விபத்துக்குள்ளாய் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரிகொண்டுவந்து சேர்க்கப்பட்டார். இவரதுசுற்றத்தவருக்கு இதுசெய்தி அறிவிக்கப்பட்டும் அவர்கள் இன்னுமே வந்துசேரவில்லை.

இவரதுகட்டிலைச் சூழவரத் திரைத்தட்டிகள் இடப்பட்டிருந்தன. ஓர் இளவயசுடைய ஆஸ்பத்திரிச் சத்திரவைத்தியரான டக்றர் ஜோர்ஜ்அவர்கள் ஓர்கன்னிகாஸ்திரீ பக்கத்தில்நிற்க, காயமடைந்தவரின் மணிக்கட்டில் தமதுகைவிரல்களை வைத்தபடிநின்றார். அந்தியவேளையை அடித்திருக்கும் அவ்வாலிபரது முகத்தின் மேற்புறமுழுவதும் கண்களைமூடிக் காயங்கள்கட்டி மறைக்கப்பட்டிருந்தது. அவரின்உதடுகள் இரத்தமேயின்றி வெளுத்துப்போயிருந்தன. மரணம் ஏலவேதானே கைவைத்துவிட்டதென்று கருதக்கூடியவகையிலே அவர்காணப்பட்டு அசைவின்றிக்கிடந்தார்.

அப்போது அந்தஆஸ்பத்திரியிலே நேர்ஸாகப் பயிற்சியடைந்துவரும் ஓர்இளநங்கை எதிர்பாராதவிதமாய் அங்கு திடீரெனத்தோன்றினாள். யௌவனமும், அழகும்பொலிந்த அவள்வதனம் மலர்ச்சியுடனும், சற்றே பதட்டத்துடனும் இருக்கக்காணப்பட்டது. அங்கு பிரமித்துப்போய்நின்ற கன்னிகாஸ்திரீயை அவள்விலத்திக் கொண்டு டக்றர்முன் விரைந்து சென்று: "ஐயா, தயவுசெய்து இங்கு அயர்ந்துகிடக்கும் இந்தவாலிபருடன் சிலபேசவேண்டுமென்று வந்தேன்; தயவுசெய்து அனுமதிப்பீர்களா?"

இதைக்கேட்டதும் அந்த இளவயசும், தயாளசிந்தையுமுடைய டக்றர் தமக்குச்சமீபமாகநின்ற கன்னிகாஸ்திரீயை ஓர்தரம் மெதுவாகநோக்கினார். அதன்மேல் நேர்ஸைவிழித்து: "இந்தவாலிபர் அறிவுநினைவற்றுக் கிடக்கிறார். அவருடன் எவ்வாறு நீபேசமுடியும்?" என்று பரிவாக மொழிந்தார்.

"ஐயா! நான்சொல்வதைச் சிலவேளை அவர்கேட்கக்கூடியவராய் இருக்கலாம்; அதனால் நான் அவருடன்ஒருகால் பேசிப்பார்க்கத்தான் வேண்டும்..."

"அப்படியானால் நீபேசலாம்" என்று டக்றரும் அவள்கேள்விக்குச் சம்மதிக்கவே, அவள் அந்தவாலிபர் முன் தனதுசிரசைத் தாழக்குனித்து, வழமையிற்காணப்படாத சுவீனமாதிரியான ஓர்செபமாலையைக் கையிலெடுத்தாள். அது நல்லதுலக்கமான கருமணிகளைக்கொண்டதாய் மிகஅழகாயிருந்தது. அதிலே சிறியதோர் வெள்ளிக்குருசு தூலங்கிக்கொண்டிருந்தது. அவள் தனதுஉதடுகளைக் காயப்பட்டிருந்த வாலிபரின் சிரசுக்குக் கிட்டவைத்து, நல்லதெளிவானகுரலில்பின் வருமாறு பதமையாகக்கூறினாள். "நீர் அதிகம் கடினவருத்தமாய் இருக்கிறீரென நினைக்கிறேன்; அதனால், இவ்வேளை ஓர்செபஞ்சொல்ல ஆசைப்படுவீர்தானேஎன நிச்சயமாயிருக்கிறேன்; அப்படிநீர் ஆசிக்கிறீர்அல்லவா? நான்சொல்வது உமக்கு நன்றாய்க்கேட்கிறதா? கேட்குமானால் ஆம் என்று உமதுசிரசை அசைத்துக் காட்டினாலேபோதும்" என்று பெரிதும்கனிவாக மொழிந்தாள்.

அப்போது கன்னிகாஸ்திரீ மிகுந்த ஆச்சரியத்துடன் டக்றரை நோக்கினாள். டக்றரோ அதைக்கவனியாமல் நோயாளியைக் கூர்ந்துநோக்கினார். பிறகு கன்னிகாஸ்திரீயும் அவ்வாறே நோக்கினார். சிறிதுவேளையில் கட்டிலிற்கிடந்தவாலிபர் தனதுசிரசை மிகுந்தகஷ்டத்துடன்சிறுக ஓர்தரம் அசைப்பதை அவர்கள்கண்ணுற்றனர்.

நேர்ஸ்உடனே பெரிதும்மனவெழுச்சிக்குரியதொனியில்: "ஓ! நான் சொன்னது அவருக்குநன்றாய்க் கேட்டிருக்கிறது" என்று இரகசியமாகக் கூறினாள். திரும்பவும் தனதுஉதடுகளை அந்தவாலிபரது சிரசின்கிட்டக் கொண்டுபோய்க் குனிந்தவண்ணம்: "நான்சொல்லும்வார்த்தைகளை நீர் சொல்ல முடியாவிட்டாலும் காரியமில்லை; உமக்காக நானேஅவைகளைச் சொல்லுவேன்; ஓ! என்தேவனுகிய ஆண்டவரே! நான்கட்டிக்கொண்ட சகலபாவங்களுக்காகவும் மனஸ்தாபப்படுகிறேன்.....எனதுசெபமாலைக் குருசை உமதுகரத்தில் வைக்கிறேன்" என்று அதைஅவர்கையில் வைத்தாள்.

அந்தவாலிபர் சுயஅறிவற்றுக்கிடக்கிறாரென நம்பியிருந்த டக்றரும், கன்னிகாஸ்திரீயும் அந்தவெள்ளிக்குருசை அவர் தனதுவிரல்களால் இறுகப்பற்றிக்கொள்வதைக் கண்டார்கள். சிலநிமிஷங்களாக இருவரும், அந்தநேர்ஸும் கட்டிலைச்சூழ்ந்து அசைவற்று, செயலற்றுஎதனையோ சிந்தித்தபடியேஸ்தம்பித்துப்போய்நின்றார்கள்.

அதன்மேல் அந்தவாலிபர் தனதுகரத்தையோ அன்றேல் சிரசையோ திரும்பஅசைக்கவில்லை. தன்னுடன் நேர்ஸ்பேசுவதற்குமுன் எப்படிக்கிடந்தாரோ அப்படியே இன்னமும் அயர்ந்துபோய்க்கிடந்தார். பின்னர் அந்தவாலிபடக்றர் நேர்ஸை மிகுந்தபட்சத்துடன் விழித்து: "உனது நண்பரா இந்தவாலிபர்? அன்றேல் உனக்கு அறிமுகமானவரா?" என்று வினவினர்.

"ஓ! டக்றர், ஒருபோதும் இல்லை; எனது சீவியகாலத்தில் நான் ஒருபோதுமே இவரைக்கண்டதில்லை. முன்பின் இவர் எனக்கு அறிமுகமானவருமல்ல."

"அப்படியா, மெத்தநல்லது" என்று டக்றர் புன்னகையுடன் மொழிந்தார் அதன்மேல் கன்னிகாஸ்திரீ அவளைநோக்கி: "நல்லது, இனிமேல் நீபோய் உனது நோயாளிகளைப் பார்வையிடுவது நலமாகுமென நினைக்கிறேன். உனதுசெபமாலையையும் எடுத்துக்கொண்டு போகலாம்"என்றார்.

"தயவுசெய்து எனதுசெபமாலையை அவருடன் விட்டுப்போக அனுமதியுங்கள்; அதனை எவ்வாறு கோர்த்து அவர் பிடித்திருக்கிறார் என்பதை நீங்கள்தானே காணுகின்றீர்களே"என்று தனது செபமாலையை அவரிடம் விட்டுப்போக டக்றரிடம் மனுப்பண்ணிக்கொண்டாள்.

"மிகநல்லது; வேண்டுமானால் நீ விட்டுப்போகலாம்."

"டக்றர், நாங்கள்நினைப்பது இதுதான். தங்களுக்காக ஒருசெபமும் சொல்லப்படாமலும், தங்கள்பாவங்களுக்காக மனஸ்தாபப்படுவதாய்ச் சொல்லிக் கொள்ளச் சந்தர்ப்பம்எதுவும் கிடையாமலும் இவர்கள் தேவனைச்சந்திக்கப் போகிறார்களே என்பதுதான்; இனி எல்லாம் சரிதான்; சிஸ்றர்! நான் போய்வருகிறேன்; இங்குநான் சிறிதுவேளை தங்கஅனுமதிதந்ததற்காக மெத்தப்பெரியஉபகாரம் டக்றர்" என்றுகூறி இருவருக்கும் சிறுபுன்முறுவலுடன் ஆசாரஞ்செய்துவிட்டு அப்பாற்சென்றாள் நேர்ஸ்பிலோமினு.

(தொடருமு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

இவ்வருடம் 27-6-58 தொடக்கம் 4-7-58 மட்டும்மடுத் திருநாளுக்கெனக் கொடுக்கப்பட்ட லீவுநாட்களில் பாடசாலை நடைபெறவேண்டுமென இத்தாற் தெரிவிக்கிறேன்.

30-6-58 திங்கட்கிழமை பகிரங்க விடுதலைநாள். அன்று பாடசாலைகள் நடைபெறக்கூடாது.

Philip Ponniah,
Gen. Manager, R. C. Schools

Jaffna. 17-6-58

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1269

யாழ்ப்பாண டிஸ்திரிக்கோட்டில்

மானிப்பாய்
சபாபதி சவுந்தராயகம்
—வழக்காளி.

எதிராக

வண்ணார்பண்ணை மேற்கு
1. சேகுசுல்தான் அப்துல்காதர் முகமட் சதக்கத்தில்லாவும்,
2. பெண்மைமூனும்
—எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திரிக்கோட்டின் M. B. 1269-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல்விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1958-ம்ஆண்டு ஆடிமாதம் 24-ந்திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 4,412-உம், இன்னும் ரூபா 3,000-த்திற்கு 8-10-56 தொடக்கம், 4-4-57வரையும் 100-க்குப் 10%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 5%வட்டியும், கோட்டுச்செலவு 241ரூபா 40சதமும். கொடுபட்டது ரூபா 2,000|-மும் செலவும்.

காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திரிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று, வண்ணார்பண்ணை மேற்கிறை. புளியடி ப. நி. 1 குளி 6½. (இன்னும்ஓர்உறுதியில் ப.நி. இ.1 குளி 8½எனக் காட்டப்பட்டிருக்கிறது.) கல்வீடும், கிணறும், பயிர்வகைகளும், இன்னும் அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு—ஒழுங்கை. வடக்கு—முகிதீன் லெபேயின் உரிமைக்காரரின் ஆதனம். மேற்கு—சாகித் கமீது முகமட்லெபே கைம்பெண் மொகமட் பாத்துமா நாச்சியாரின் ஆதனம். தெற்கு—சாகித் கமீது முகமட்லெபே கைம்பெண் மொகமட் பாத்துமா நாச்சியாரின் ஆதனமும், காவாத்துறை றோட்டும்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனரும், மதிப்பாளரும்.

24, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம். 16-6-58

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1655

யாழ்ப்பாண டிஸ்திரிக்கோட்டில்

யாழ்ப்பாணம் ஸ்ராண்லிமேட்,
பொன்னம்பலம் செல்லப்பா
—வழக்காளி

எதிராக

திருநெல்வேலி திருநெல்வேலி வடக்கு
ரி. வேலுப்பிள்ளை சபாரத்தினம்
கைம்பெண் கனகம்மா
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M. B. 1655-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணி 1958-ம்ஆண்டு ஆடிமாதம் 22-ந்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 3141/45யும், இன்னும்ரூபா2500/-க்கு 29-5-57தொடக்கம் 28-8-57வரையும் நூற்றுக்கு 12%வட்டியும், பின்கூட்டுத்தொகைக்கு இறுபடும் வரைக்கும் நூற்றுக்கு 5%வட்டியும், கோட்டுச் செலவு 227ரூபா 85சதமும்.

காணிவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி கல்லூர் கோயிற்பற்று திருநெல்வேலியிறை எட்சாட்டி ப. நி. இ. 2. (பதிவு D 144/204) மேற்படி எட்சாட்டி ப. நி. இ. 2. (பதிவு D 88/255) இரண்டும் ஒருங்குசேர்ந்த ப. நி. இ. 4 விஸ்தாரம்கொண்ட ஒரேதண்டாய் இருக்கின்றது. வீடும், செயபயிர்வான்பயிர்களும், வடகிழக்கே இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழமையான வழிவாய்க்காலுரித்தும். எல்லை: கிழக்கு—ராகமுத்து பெண் மாரிமுத்துவின்உரிமைக்காரரின் ஆதனம். வடக்கு—கார்த்திகேசு பொன்னையாவிற்கும், மற்றும் பேருக்குமுரிய ஆதனம். மேற்கு—ஒழுங்கை தெற்கு—எதிரியின் ஆதனம். பதிவு இல. D 236/113.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனரும்,
மதிப்பாளரும்.

24, சப்பெல்வீதி,
யாழ்ப்பாணம். 16-6-58

Order Nisi declaring will proved

IN THE DISTRICT COURT OF JAFFNA
Testamentary Jurisdiction } No. 469.

In the matter of the last will and testament of the late Mary Tiruchelvam, widow of Emmanuel Tiruchelvam of 4th Cross Street, Jaffna. Deceased.

Anton Ratnam Joseph of 4th Cross Street, Jaffna.
Petitioner.

Vs.

1. Isabella wife of Anton Ratnam Joseph of 4th Cross Street, Jaffna.
2. P. Saverimuttu of do
3. Alfred Swampillai of do
4. Mrs. R. J. Paul of 'Airy Dale', Beach Road, Jaffna.
5. Mrs. Malar Alphonsus of 53, 4th Cross Street, Jaffna.
6. A. F. Alphonsus, P. W. D. Office, Puttalam.
7. A. W. Joseph, c/o A. F. Alphonsus, P. W. D. Office, Puttalam.
8. Mrs. Emmanuel Joseph c/o Mrs. M. Alphonsus, 55, 4th Cross Street, Jaffna.
9. Mrs. Robert Nevins of 3rd Cross Street, Jaffna.
10. Robert Nevins of do.
11. Mrs. R. Bastiampillai, c/o B. Bastiampillai, P. W. D. Office, Puttalam.
12. Mrs. A. J. Nicholas, c/o A. J. Nicholas, Retired Teacher, Karampan, Kayts.
13. A. J. Nicholas, Retired Teacher, Karampan, Kayts.
14. Mrs. Ranee Nevins, and
15. A. G. Nevins, Irrigation Department, Mawiletchiya, Anuradhapura.

Respondents.

This matter coming on for disposal before N. Sivagnanasundaram, Esquire, Acting District Judge, Jaffna, on the 30th day of May 1958, in the presence of Mr. A. Arulambalam, Proctor on the part of the Petitioner and the affidavits of the Petitioner and the attesting Notary and witnesses dated 28th May 1958 having been read: It is ordered that the last will and testament of the deceased Mary Tiruchelvam widow of Emmanuel Tiruchelvam dated 28th Oct. 1957 attested by A. Arulambalam, Notary Public and numbered 638 be and the same is hereby declared proved and the Petitioner be entitled to have Probate of the same issued to him accordingly unless the Respondents or others shall on or before the 14th day of July 1958 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 30th day of May 1958.

Sgd. **P. Sri Skanda Rajah,**
District Judge.

Drawn by
A. Arulambalam,
Proctor for Petitioner.

உதிர்ந்த மலர்கள்

வேதனையில் ஆறுதல்

அர்ச். தெப்பாசி மரியமதலேனம்மாள் கார்மேல்மடத்துக் கன்னியாஸ்திரி. பொறுமையின்களஞ்சியம். யேசுவின் சிநேகபத்தினி. கடினவியாதியினால் மிகவும் வேதனைப்பட்டாள். ஆனால், அவளுடைய வாயிலிருந்து முறைப்பாடான வார்த்தை ஒருபோதும் வராது. சகிக்கமுடியாத அவ்வளவு வேதனைகளையும் பொறுமையாய்அனுபவிக்க உனக்குத்தைரியம் எங்கிருந்து வருகிறது? என்று ஒருவர் கேட்டதற்குத் தெப்பாசி பாடுபட்டசூரபத்தை எடுத்துக்காட்டி: "இதோபார்! என் ஆத்துமத்தை இரட்சிக்கத் திவ்விய யேசுவின் திருஇருதயம் எவ்வளவு பாடுபட்டிருக்கிறது! இதுதான் நான் படும் வேதனையில் எனக்கு ஆறுதல்" என்று விடைபகர்ந்தாள்.

குழந்தையைப் பார்த்து

அல்போன்ஸோ ஆல்புகர்க் என்பவர் பிரக்கியாதிபெற்ற போர்த்துக்கேய கடற்படைத் தளபதி. அவர் இந்தியாவுக்கு வரும்போது நடுச்சமுத்திரத்தில் பெரும்புயல்வீசிப் பெரும்அலைகள் வானமட்டாக உயர்ந்தெழும்பிக் கப்பலைக் கவிழ்த்துவிடப்போகும் சமயத்தில் மாலுமிகளும், பிரயாணிகளும் பயந்துநடுங்கிக் கூக்குரலிட்டுக் கதறி அழுதார்கள். தளகர்த்தர் கப்பலில் இருந்த ஒருசிறுகுழந்தையைத் தமது கரங்களிலேந்தி ஆகாயத்தில் பிடித்து: "ஆண்டவரே! நாங்களெல்லோரும் பெரும்பாவிகள்; மாசற்ற இந்தக் குழந்தையின் முகத்தைப்பார்த்து எங்களை இந்த ஆபத்தினின்று காத்தருளும்" என்று பிரார்த்தித்தார். அக்ஷணமே புயல்அமர்ந்தது. கப்பலுடன் கப்பலிலுள்ளவர்களும் காப்பாற்றப்பட்டனர். குருவானவர் திவ்வியபூசைப்பலி நிறைவேற்றும்போது மானிடரின் பாவங்களை மன்னிக்கும்படி தேவபாலனைத் தமதுகரத்திலேந்திப் பரமபிதாவைநோக்கி மன்றாடுகிறார். மாசற்ற குழந்தையேசுவின்முகத்தைப்பார்த்து நமதுபாவங்களைப் பொறுத்துக்கொள்ளச் சர்வேசுரன் எப்போதும் தயாராயிருக்கிறார். பூசைகண்கிறவர்கள் குருவானவருடன் ஒன்றித்து அவர் நடுப்பூசையில் கையிலேந்தி உயரத்தூக்கும் திவ்வியகுழந்தையைப் பரமபிதாவுக்கு ஒப்புக்கொடுத்துத் தங்கள் பாவங்களை மன்னிக்கும்படி பிரார்த்திக்கவேண்டும்.

நெப்போலியன் கூறுகிறார்

ஐரோப்பாமுழுவதையும் செயித்துத் தனதுஆட்சிக்குள்அடக்கிய வெற்றி வீரனுகிய நெப்போலியச்சக்கிரவர்த்தி எலேனுதீவில் சிறைவாசஞ்செய்கையில் ஒருநாள் கடற்கரையில் நின்றுகொண்டு வானத்தையும், பூமியையும், அகன்றுவிரிந்து அலைமோதி எல்லையின்றித் தன்முன்பாகப் பரவிக்கிடந்த பெரியசமுத்திரத்தையும் பார்த்துவிட்டுச் சொல்வார்: "இவ்வுலகில் பற்பல தேசங்களின் சிம்மாசனங்களில் மகிமைப்பிரதாபத்தோடு வீற்றிருந்த மகாராஜாக்கள், யுத்தத்தின் முன்னணியில் நின்று அஞ்சாநெஞ்சோடு போர்புரிந்த பராக்கிரமசாலிகளான சேனுபதிகள், குபேரசம்பத்துக்களை வைத்துக்கொண்டு செல்வாக்காய்வாழ்ந்த தனவந்தர்கள் எல்லோரும் ஒருவர்பின் ஒருவராய் மாண்டுமடிந்தனர்; பற்பல நாடுகள் தலையெடுத்துச் சிறிதுகாலம் அதிகாரம்செலுத்தி இருந்தவிடமும் தெரியாமல் மறைந்துபோயின; சிம்மாசனங்களும், இராசகிரீடங்களும் தரையில் வீழ்ந்து அழிகின்றன; கத்தோலிக்கதிருச்சபையோ காற்றிலும், மழையிலும், கொடும்புயலிலும் அசையாது வைரமாலைபோன்று எக்காலமும் நிலைபெயராது நிற்கின்றது. அதை அழிக்க எவராலும்முடியாது."

காந்திஜி கூறுகிறார்

மகாத்மாகாந்தி மரிக்கிறதற்குச் சில காலத்தின்முன் அவருக்கு அறிமுகமானஒருவர் அவரைநோக்கி: "இந்தியாவில் வேதகலாபனைவருமா? கிறீஸ்துவர்கள் தங்கள்வேதத்துக்காக நிர்ப்பந்தப்படவேண்டியிருக்குமா?" என்று கேட்டார். அதற்குமகாத்மா: "வாஸ்தவம்; கிறீஸ்துமதத்தைத்துன்புறுத்தி நிர்ப்பந்தித்தால் கிறீஸ்துவர்களின் தொகை அதிகரிக்குமேயொழியக் குறையாது; கிறீஸ்துமதத்துக்கு இக்கட்டுஇடைஞ்சல்கள் இல்லாதகாலத்தில்தான் அது விருத்தியாவதில்லை" என்று பதிலளித்தார்.

கழுதைக் கதை

பிரான்சுவா காரோல் பேர்போன சொற்பொழிவாளர். ஒருநாள் தொழிலாளர் கூட்டம்ஒன்றில் ஓர்சொற்பொழிவுநிகழ்த்தினர். தொழில் அபிவிர்த்தி, உற்பத்திப் பொருட்களைப் பெருக்குதல், சிக்கனம், இலாபத்தில பங்கு, தொழிலாளர் முன்னேற்றம், இன்னும் இவைபோன்றவிஷயங்களைப் பற்றி மிகுந்தஆர்வத்துடன் பேசினர். அங்குகூடியிருந்த வாலிபர்களுள் அநேகர் சொற்பொழிவைக் கேட்பதற்குப் பதிலாய்த் தங்களுக்குள்ளே தமாஷாய்ப் பேசிச்சிரித்து உபேட்சையாய் இருப்பதைக் கவனித்த சொற்பொழிவாளர் தாம்தொடக்கியசொற்பொழிவை நிறுத்திவிட்டுப் பின்வரும் கதையொன்றைச் சொல்லத்தொடங்கினர்: "ஒருமனிதன் ஒருகழுதையை வாடகைக்குஅமர்த்தி அதன்மேல் ஏறிக்கொண்டு பிரயாணம் செய்தான். கழுதையின் சொந்தக்காரன் அவன்பினனே நடந்துசென்றான். இதைக் கேட்டதும் பேசி விளையாடிக்கொண்டிருந்தஎல்லோரும்தங்கள்சம்பாஷணையைநிறுத்தி அவர்சொல்வதை மிகுந்த கவனத்தோடு கேட்டார்கள். அவர் தொடர்ந்து சொன்னதாவது: "பிரயாணி சிறிதுதூரம் கழுதையில்சவாரி செய்தபின் உஷ்ணமாயிருந்ததால் கீழே இறங்கிக் கழுதையின்நிழலில் உட்கார்ந்து சற்று இளைப்பாறினன். இதைப்பார்த்த கழுதைக்காரன் பிரயாணியிடம்வந்து, உனக்கு என்கழுதையை மாத்திரம்தானே வாடகைக்குக் கொடுத்தேன்; நீ இப்போது கழுதையின்நிழலையும் உபயோகிக்கிறதினால் இன்னும் ஒரு ரூபா வாடகை சேர்த்துக்கொடுக்க வேண்டுமென்றான். இதையிட்டு இருவருக்குமிடையே வாக்குவாதம்உண்டாகி அடிபிடி ஆரம்பமாகிக் குத்துச்சண்டையாகிவிட்டது" என்று பிரான்சுவா காரோல் சொல்லிவிட்டுத் திடீரென மேடையைவிட்டு இறங்கிவிட்டார். கூட்டத்திலிருந்த வாலிபர்கள் அந்தக்கதையின்முடிவைச் சொலல வேண்டுமென்று அவரை அலட்டித் தொந்தரவுசெய்தார்கள். பிரான்சுவா ஓர்நல்ல கத்தோலிக்கர். அந்தவாலிபர்களைப் பார்த்து: "சகோதரரே! கழுதைக்கதையைக் கேட்க இவ்வளவுஆவலாயிருக்கும்நீங்கள் உங்கள் சமூகசேம வாழ்க்கையைக்கோரி உங்களுக்கு நான்சொன்ன நற்புத்தியைக் கவனியாமல் தமாஷாய்ப்பேசிச் சிரித்துக்கொண்டிருந்தீர்கள்; இப்படியே கோவிலில் குருவானவர் பிரசங்கம் செய்யும்போது உங்கள் ஆத்தும நன்மையைக்கருதி மேலான புத்திமதிகளைச் சொல்லுகிறார்; நீங்களோ அவர்சொல்வதைக் கவனியாமல் கோவிலுக்குவெளியே நின்றுகொண்டு கழுதைக் கதையைப்போன்ற வீண்பேச்சில் நேரத்தைப் போக்குகிறீர்களே; இவ்வாறு நடப்பவர்கள் வேதகல்வியறிவு இல்லாமல் விசுவாசத்தை இழக்கும் ஆபத்திலிருக்கிறார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்" என்றார்.

உலோபி எறிந்த ரொட்டி

M. P.

அப்போஸ்தலர்களின் தர்மகாரியங்களை நடத்தும்அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்த அர்ச். அருளப்பர் தாம் மறுத்தபோதிலும் மற்றவர்களால் அலெக்சாந்திரியாநகரின் பிதாப்பிதாவாக நியமிக்கப்பட்டார். அவர் அந்த உந்நதஸ்தானத்துக்கு உயர்த்தப்பட்ட பின் அவருடைய முதல்வேலைகளில் ஒன்று அப்பட்டணத்திலுள்ள தரித்திரர்களின் பெயர்கள் அடங்கிய ஒரு இடாப்பைத் தயார்செய்வதாயிருந்தது. அவர்தரித்திரர்களை மிகவும் நேசித்துவந்தார். அவர்களைத் தம்முடைய "ஆண்டவர்கள்" என்று அழைப்பார். அப்பட்டணத்தில் 7,500 ஏழைகள் இருப்பதாகக்கணக்கெடுத்து அவர்களின்பெயரை அந்தஇடாப்பில் பதிந்துவைத்தார்.

அத்தனை பெருத்ததொகையான தரித்திரர்களுக்குத் தர்மஞ்செய்வது உள்ளபடியே சுலபமானகாரியமாய் இருக்கவில்லை. அதற்குப் பெரியவருமானம தேவையாயிருந்தது. அர்ச். அருளப்பர் ஏழைகளுக்கு உதவிசெய்யும்படியாய் அடிக்கடி தமதுபிரசங்கத்தில் கேட்டுக்கொள்வார். சனங்கள் சந்தோஷத்துடன் பணங்கொடுக்க ஆசை உண்டாக்கும்படியாய்ப் பலவிதசரித்திரங்களை அவர்களுக்குச் சொல்லிவருவார். ஓர்காலத்தில் உலோபியான இராயப்பனின்சரிதையைப் பின்வருமாறு எடுத்துக்கூறினர்.

ஒருநாள் அகேபிச்சைக்காரர் வெயிலிலே குளிர்காய்ந்துகொண்டிருந்தனர். அவர்கள் எதைப்பற்றித் தங்களுள் பேசிக்கொண்டிருந்தார்கள்? சந்தேகமின்றியே தருமவிஷயமாகத்தான். அந்தஊரில் யார்யார் தருமஞ் செய்வதில் பிரியமுள்ளவர்கள், யார்யார்பிரியமற்றவர்களென்று அப்போது அவர்கள் தங்களுள்ளே சொல்லிக் கொண்டார்கள். தருமங்கொடுக்கப் பிரியமற்றவர்களில் அதிகம்சிரேஷ்டமானவன் வங்கிக்கார இராயப்பனே என்று அவர்கள்சாதித்தார்கள். அவனைப்போல்உலோபி இந்தஉலகில் அகப்படுவது அரிது. பிச்சைக்காரர் அவன் கண்ணிலேவிழிக்கப்படாது. ஏழைகள் மட்டிலும், துன்பப்படுகிறவர்கள் மட்டிலும் அவன் கிஞ்சித்தும் இரக்கங்கொள்ளாத கல்நெஞ்சன். அவனிடம் தருமங்கேட்டால் அடிவாங்கிக்கொண்டுதான் திரும்பவேண்டும்.

பிச்சைக்காரரில் பலர் இராயப்பன் வீட்டுக்குத் தருமங் கேட்கப்போய்த் தடியடிவாங்கிக்கொண்டு வந்ததை அவர்கள்விபரமாகச் சொல்லிக்கொண்டிருந்தனர். அப்போது ஒருபிச்சைக்காரன், "பார்ப்போம், நான்போய் அந்தக்கல்நெஞ்சனிடம் ஏதாகிலும்வாங்கிக் கொண்டு வருகிறேன், என்னசொல்லுகிறீர்கள்? பந்தையம் போடுகிறீர்களா?" என்றுகேட்டான்.

வேறோர்பிச்சைக்காரன் அதைக் கேட்டு,"மெய்தான், நீஅகத்தியம்ஏதாகிலும் வாங்கிமுடிந்துகொண்டுதான் வருவாய்; அதாவது, முதுகில்ஒருஉதை அல்லது தலையில்ஒருஅடி" என்று வேடிக்கையாகக் கூறினன்.

அதற்கு முந்தியவன், "இல்லை, இல்லை; தருமம்வாங்கிக்கொண்டு வருகிறேன்பார், என்னபந்தயம்?" என்றுகேட்டான்.

"எனக்கு இன்றுகிடைப்பதில் பாதி" என்று மற்றவன்உடனே மறுமொழிகொடுத்தான்.

"நல்லது, அப்படியேயாகட்டும்" என்றுசொல்லிக்கொண்டு முதல்பிச்சைக்காரன் வங்கிக்கார இராயப்பன் வீட்டைநோக்கிப் புறப்பட்டான்.

பிச்சைக்காரன் வீட்டுவாயிற்படிக்கு முன்பாகச்செல்லும்போது, வங்கிக்கார இராயப்பனும் தன்வீட்டைநோக்கி வந்துகொண்டிருந்தான். அப்போது பிச்சைக்காரன் தன்கைகளைநீட்டி, "ஐயா! தர்மம், ஆண்டவரின் முகத்தைப்பார்த்துப் பிச்சைகொடும் ஐயா" என்று இரந்துநின்றான்.

அப்போது வங்கிக்காரஇராயப்பன் கடுங்கோபமுற்றுப் பிச்சைக்காரன் மேல் விட்டெறியக் கல்தேடிப்பார்த்தான், அகப்படவில்லை பக்கத்தில் அவனுடைய வேலைகாரரில்ஒருவன் வைத்துவிட்டுப்போன வாற்கோதுமை மாவால்செய்த ரொட்டிகள் நிறைந்த கூடையொன்றிருந்தது. இராயப்பன் கல்லுக்குப்பதிலாய் அந்த ரொட்டிகளில் ஒன்றைஎடுத்துப் பிச்சைக்காரன் முகத்திற்போய் விழும்படியாக வீசினன். பிச்சைக்காரனை ரொட்டியால் தாக்காயப்படாதபடி சற்றுஒதுங்கி நின்று, பின்புகுனிந்து ரொட்டியை எடுத்துக்கொண்டு, தன்தோழர்களிடம் போய்த் தான்பந்தையம் ஜெயித்துவிட்டதாகச் சொல்லி, ரொட்டியை அவர்களுக்குக் காட்டினன்.

சிலதினங்களுக்குப்பின் இராயப்பன் கடினவியாதிகண்டு படுக்கையில்விழுந்தான். அப்போதுஅவன் ஒருகனவு கண்டான். அதிலேதான்மரித்துத்தேவனுடைய தீர்வைத்தலத்தில் நின்றுகொண்டிருப்பதாகவும், நீதியாதித்தர் ஒருதராசைப்பிடித்துத் தனதுகிருத்தியங்களை நிறுத்துப்பார்ப்பதாகவும் கண்டான். அப்போது பிசாசுகள்ஓடிவந்து அவனுடைய தீயசெயல்களையெல்லாம் ஒருதட்டில் வைத்துக்கொண்டிருந்தன. வெண்அங்கிதரித்த சம்மனசுகள் மற்றத்தட்டில் வைக்கும்படியாக அவனுடைய நல்லசெயல்களைத் தேடிக்கொண்டிருந்தன.

திடீரென ஒருசம்மனசு மற்றவைகளைப்பார்த்து, "இதோ, ஓர்ஏழைப் பிச்சைக்காரன்தலையிலே அவனுல்எறியப்பட்ட வாற்கோதுமை ரொட்டி ஒன்று இருக்கிறது" என்றுசொல்லி அதையெடுத்து அத்தத்தட்டில் வைத்தது. ரொட்டி மிகப்பாரமாயிருந்தது. ஆயினும், மற்றத்தட்டிலிருந்த தீயசெய்கைகளின்நிறை இன்னுமதிகமாய் இருந்தது.

ஆகையால், நீதியாதித்தர் சம்மனசுகளைப்பார்த்து: "இன்னும் வேறேதாகிலும் கொண்டுவாருங்கள்; அன்றேல் பிசாசுகள் இவனைக்கொண்டுபோய்விடும்; ரொட்டியும் நல்லஎண்ணத்துடன் கொடுக்கப்படவில்லை" என்றுசொன்னார்.

அச்சமையத்திலே இராயப்பன்விழித்துக்கொண்டான். ஆகையால், சொர்ப்பனத்தின்முடிவு என்னவென்று அவன் அறிந்தானில்லை. ஆயினும், அவன் அதனால்மிகவும்பயந்து, அத்தச்சொர்ப்பனம் தேவனுல் தனக்குஅனுப்பப்பட்ட எச்சரிக்கையென உணர்ந்தான். தான் இஷ்டப்படாமல்கொடுத்தரொட்டியே தேவசந்நிதானத்தில் அத்தனைவிலையுயர்ந்ததாய் இருக்குமாகில், மெய்யான தருமத்தின்பலாபலன் எத்தனைவிலைமதிக்கப்படாததாய் இருக்கவேண்டுமென்று யோசனைசெய்தான். ஆகையால், இனிமேல் சகலபிச்சைக்காரர்மட்டிலும் தயவாயிருக்கவேண்டுமென்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டான். அந்தப்படியே அவன் ஆரோக்கியமடைந்தபின் முன்னர் எவ்வளவு உலோபியாய்இருந்தானோ அவ்வளவு தருமவாளனாய் இப்போதுஆகிவிட்டான்.

ஒருநாள்இராயப்பன் ஆலைக்குப் போய்க்கொண்டிருக்கையில், ஏறக்குறைய நிருவாணமாயிருந்த ஒருஏழையைக் கண்டான். கண்டதும்உடனே தன்போர்வையைக்களைந்து அந்தஏழையிடம் கொடுத்துவிட்டுப் போனான். அவன்பிறகு தன்வீட்டுக்குத் திரும்புகையில் தான்காலையில் தருமமாய்க் கொடுத்தபோர்வை ஒருசாய்ப்புக்கத

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதவீரர் பக்கம்

அருமைச் சகோதரங்களே!

வான்பரோவில்உள்ள ஸ்ரீமதி உவாட்அம்மையாரை நீங்கள் சந்தித்தால் அவர் அதிபெருமைமிறைந்தவரென எண்ணுவீர்கள். அப்பெருமைக்குக்காரணம் அவருடையமகன் ஜோண்.

ஜோணைப்பற்றி ஏன்கூறுகிறேன்எனில் இது லூர்துநூற்றாண்டு. லூர்துபதிக்கு யாத்திரைசெய்யுங்காலம்.

லூர்து திருசேத்திரத்துக்குச் செல்லுபவர் புகையிரதம், மோட்டர், ஆகாயவிமானம்போன்ற வாகனவசதிகளை உபயோகிக்கின்றனர். குழுக்களாகச்சேர்ந்து சைக்கிள்வாகனத்தில் சிரமத்துடன் செல்லுகிறவருமுண்டு. ஜோண் அதிசிரமமானவழியை உபயோகித்தான்—கால்நடையாகச்சென்றான்.

போமன்ட் கத்தோலிக்க மாணவ யாத்திரிகர்குழுவில் ஒரு உறுப்பினனாக ஜோண்சென்றான். கால்நடையாகச்சென்றாலும் செல்லும்வழியில் வாகனவசதிகிடைத்தால் ஏற்றுக்கொள்வதுஎனத் தீர்மானித்திருந்தான். ஜோணுக்குவயது 17; விக்ரோறியாப்புகையிரதநிலையத்திலிருந்து பிரான்சிலுள்ள கலேக்குச்செல்லப் பயணச்சீட்டுடனும், வழிச்செலவுக்குப் பத்துப்பவுணுடனும் புறப்பட்டான்.

யாத்திரையை முடித்துவர நான்குவாரங்கள் சென்றன. அர்ச். தெரேசம்மாள் பதியான லிசியேயையும் வழியில் தரிசித்தான்.

ஜோண் புறப்பட்டபொழுது அவனதுதாயார் சற்றே தயக்கங் கொண்டாள். லூர்துபதியிலிருந்து கடிதஅட்டை கிடைத்தபொழுது அவள் ஆறுதலடைந்தாள்.

வழியில்சந்தித்தவர்களெல்லோரும் ஜோணுக்கு அன்பும் ஆதரவும் அளித்தனர். ஒருமனிதர் அவனை (தன்வாகனத்தில்) ஏற்றிச்சென்று, ஓர்விடுதிச்சாலையில் சம்பிரமமான விருந்தளித்து, ஜோண் நன்றிகூறுமுன்னரே மறைந்துவிட்டார்.

தெருத்திண்ணையில் இரவைக்கழிக்க எத்தனங்களுடன் ஜோண் சென்றபொழுதும் ஓர்இரவாவது இல்லிடமின்றி வெளியில்தங்க நேரவில்லை.

லூர்துபதியில் ஜோண் நொண்டித்திரிவதைக்கண்ட ஒருவர் நடப்பதற்கு வசதியான சப்பாத்து ஒருசோடு வாங்கிக்கொடுத்தார். அங்கு ஜோண் மரியாதையுடன் நடந்துகொண்டதையும், பணிசெய்ய ஆவலாயிருப்பதையும் மக்கள்கவனித்தனர்.

நோயாளரைப் புகையிரதநிலையத்திலிருந்து லூர்துகெபிக்குத் தூக்கிச்செல்லும் சேவைபுரிந்தான் ஜோண். அதற்காகக் காலை 5 மணிக்கு எழுந்திருக்கவேண்டியிருந்தாலும் அவன் ஆயத்தமாயிருந்தான்.

பரீசில் ஒருகுருவானவர் அவனைப்புகையிரதநிலையத்திற்சந்தித்து ஒருகுடும்பத்தினருக்கு அறிமுகப்படுத்திவைக்க அவர்கள் அவனை மூன்றுநாட்களாகத் தங்கள்விருந்தினராக வைத்திருந்து பட்டணம் முழுவதையும் காண்பித்தார்கள்.

இம்முறை நீங்கள் மடுவுக்கு யாத்திரையாய்ச் செல்லாவிடினும் எமதுநாட்டில் **நீதிநிலைப்பதினால் சமாதானம்நிலைக்க** அன்னையை மன்றாடுங்கள். சேவைசெய்வது கிறீஸ்தவனின் சிறப்புஎனவும் மனதிற்கொள்ளுங்கள்.

அன்னை.

—*—

இரு குண்டுவீசும் விமானங்கள் தேவை

பிரான்சிய கத்தோலிக்க பிரபு ஒருவர் ஐக்கிய அமெரிக்காவையும், ரஷியாவையும் இரண்டு விமானங்கள் தரும்படி கேட்கிறார். அந்தஇரு விமானங்களையும் விற்று உலகத்திலுள்ள குஷ்டரோகிகள் எல்லோருக்கும் போதியதான மருந்துகளை வாங்கலாமாம்.

ரூல்வ் வொல்லெரோ பிரபு குஷ்டரோகிகளுக்கு உதவிபுரியும் இல்லறத்தாரின் பிரான்சிநேக சபையொன்றை அடியிட்டிருக்கிறார்.

மூற்கூறிய இரு தேசங்களினதும் தலைவர்களுக்குக் கடிதமெழுதி இரு பகுதியினரும் இருவிமானங்களை அளிப்பது அவர்களது விமானப் பலத்தைக் குறைக்காது எனக் கூறினார்.

உலகில் ஒருநாளில் மூன்றுநேரம் சாப்பிடுகிறவர்களை விழித்து: பிறரும் அப்படிச் சாப்பிடுகிறார்கள் என எண்ணாமல் "செபத்தாலும், தருமத்தாலும்" குஷ்டரோகிகளுக்கு உதவும்படி கேட்டிருக்கிறார்.

நேசத்தாய்க்குச் சிறுவரின் விண்ணப்பம்

கன்னிமா மரியே
நிர்மல தாய்மரியே
தூயராகச் சேயர்வாழ
தூயன்குமாரனை வேண்டிடுவாய்.

●

அண்டிஞரைக்காக்கும் தயாபரியே
அன்புடன் மைந்தர்முகம் பாரம்மா
அலகையின் மிடிமை தீர்த்து
ஆதரித்து எமை யாள்வாய்

●

பாவமாசின்றிச் சென்மித்த ஈஸ்வரியே
பாலர்யாம் பொய்யின்றிக் களவின்றிப்
பாரினில் நலமுடன் வாழப்
பாலயேசுவை வேண்டிடுவாய்

●

சோதனைகள் வரும் வேளை
சோர்ந்திடா தெமைக் காப்பாய்
சோதிவீசும் சுந்தரத் தாயே
சோகம்நீக்கி யெமை யாள்வாய்

எ. கி. விக்டர் பெர்னாந்து

தெரிந்துகொள்ளுங்கள்

ஏழு ஆங்கில அரசரும், இளவரசரும் அர்ச்சியசிட்டபட்டம் சூட்டப் பெற்றிருக்கின்றனர்.

அர்ச். றிச்சாட் — மேற்கு சக்ஸன் இராச்சியத்தின் இளவரசர்.

அர்ச். ஒஸ்வால்ட் — நொதம்பர்லன்ட் அரசர்.

அர்ச். எட்வின் — நொதம்பர்லன்ட் அரசர்.

அர்ச். எட்வேட் — இங்கிலாந்தின் அரசர்.

அர்ச். எட்மண்ட்—கிழ்அங்கிளியா அரசர்.

அர்ச். எட்வேட் — இங்கிலாந்தின் அரசர்.

அர்ச். லூசியுஸ் — பிரித்தானிய அரசர்.

* * *

மூப்பது ஆங்கில சக்ஸன் அரசர்களும், அரசிகளும் செல்வமும், அமைதியும் நிறைந்த காலத்தில் தங்கள் சிம்மாசனத்தைத் துறந்து சந்நியாசிகளாயினர்.

* * *

முதலாவது அர்ச்சியசிட்டபட்டம் —993 மாசி 3 இல் XV-ம் அருளப்பபாப்பானவர் அர்ச். உல்றிக் என்பவருக்கு அளித்தார்.

* * *

அர்ச். நொன்னுவுக்கு மூன்று அர்ச்சியசிட்ட பிள்ளைகள்:— அர்ச். கிறகோரியார், அர்ச். சேசாரியுஸ், அர்ச். கோர்கோனியாள்.

* * *

அர்ச். தெமிஸ்ரோக்கிளிஸ் கைபிழைபாடாக வேதசாட்சியாக்கப் பெற்றார். அவர் ஆடுமேய்த்துக் கொண்டிருக்கும்போது தியொஸ் கொறுஸ் என எண்ணிக் கைதியாக்கப்பெற்றார். அப்பிழையை விளக்க தெமிஸ்ரோக்கிளிஸ் ஒன்றும் செய்தாரில்லை.

—*—

இருபொன் மொழிகள்

பிரான்சு தேசத்தின் பிரகாசமும் பெருமையுமாக விளங்கும் வேதவித்துவான்களில் ஒருவரான பொசுவே என்னும் மேற்றிராணியார் தமது அரிய சிநேகிதனாகிய றூஞ்சேஎன்னும் மடாதிபதியின் சிற்றூலயத்துக்கென நத்தால் திருநாளுக்குமுன் ஒருபாலன்தொட்டில் செய்வித்திருந்தார். அதை அவ்வளவு அலங்காரமாகச் செய்துமுடித்த சிற்பாசாரிகளுக்குச் சம்பளத்தைவிட ஏதோ இனம் கொடுக்கத் தீர்மானித்து அவர்களைவரஅழைத்தார். அவர்கள் வந்தபோது மேசையில் வெகுமதிகள்வைத்து மூடப்பட்டிருந்த வஸ்திரத்தை எடுத்துவிட்டுப் புன்னகையோடு பின்வருமாறு சொல்வார்: பிள்ளைகளே! இன்றைக்கு நத்தாலுக்கு முதல்நாள். நீங்கள்செய்த திறமான சித்திரவேலைக்காக உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒருசிறுவெகுமதி அளிக்கப்போகிறேன். இங்கே ஒருபொன்நாணயம் இருக்கிறது. அத்தோடு ஒருநல்லபுத்தகமும் இருக்கிறது. ஒவ்வொருவரும் விருப்பம்போல் ஒன்றில் புத்தகத்தை அல்லது பொற்காசை எடுக்கலாம் என்றார். முதல்வந்தவன் புத்தகத்தைப் பார்க்கவும் நினையாமல் "நான் ஒருபோதும் அதிகம் வாசிக்கிறதுமில்லை, புத்தகங்களால்எனக்கு அதிகம் உபயோகமுமில்லை" என்று சொல்லிக்கொண்டு பொன்நாணயத்தையே இறுஞ்சியெடுத்தான். அடுத்தவன்வந்து தனக்கு மாரிகாலத்துக்கு ஒருநல்ல கம்பளிச்சட்டை தேவை என்று சொல்லிப் பொற்காசைத்தான் கைப்பற்றினான். மற்றவனும்வந்து தனக்கு மாரிகாலத்தில் கூதல்காய விறகுதேவையென்ற சாட்டுச்சொல்லிப்பொற்காசையே தூக்கினான். நாலாம்பெயர்வழிகாரன்வந்து முதல்புத்தகத்தையும், பின்புபொற்காசையும் கவனமாய்ப் பார்த்துவிட்டுச் சொல்வான்: "என்தாய் கண்தெரியாத வறுவிலி. இந்தப் பொன்நாணயம் அவவுக்குக் கொஞ்சநாளைக்கு உதவுந்தான். ஆனால், அது சீக்கிரம் செலவாய்ப் போகும். அவளன்றூல் பத்திவைராக்கியம்உள்ளவ ஆனபடியால் அவவுக்கு ஒருநல்லபுத்தகம் அதிகம் விருப்பமாயிருக்கும். அடைமழை நாட்களில் நான் அதை அவவுக்கு வாசித்துக் கொண்டிருக்கக்கூடும். ஆகையால் வயதுசென்ற என்வறிய மாதாவுக்கென நான் இந்தப்புத்தகத்தையே எடுக்கிறேன்" என்றான். பத்தியும் புத்தியுமுள்ள அந்தவாலிபனுடைய வார்த்தைகளைக்கேட்டு மேற்றிராணியார் மிகுந்தமனஉருக்கங்கொண்டார். வாலிபன் புத்தகத்தையெடுத்து அதன் பெயர் என்ன என்று பார்க்கிறதற்காகத் திறந்தபோது முதற்பக்கத்திற்தானே ஆறு பொன்நாணயங்கள் இருக்கக்கண்டான். இவனுக்குத் தன்தோழரிலும்பார்க்க ஐந்து பொன்நாணயங்கள் கூடக்கிடைத்தன. அத்தோடு ஒருநல்ல புத்தகமும் வாய்த்தது. மற்றவேலைக்காரர் வெட்கமும் துக்கமும் நிறைந்தவர்களாய்த் தலையைக் குனிந்து கொண்டார்கள்.

அவர்கள் புறக்கணித்துவிட்ட மூன்று புத்தகங்களையும் மேற்றிராணியார் எடுத்து விரித்தார். அவைகள் ஒவ்வொன்றிலும் ஆறுபளபளப்பான பொன்நாணயங்கள் இருந்தன. அவைகளைக்கண்டதே அந்த மூன்றுபேரும் பட்டவெட்கமும் துக்கமும் விபரிக்கும் தன்மையல்ல. மேற்றிராணியார் அவர்களை நோக்கி: பிள்ளைகளே, நீங்கள் பரலோக நன்மைகளிலும் உலகநன்மைகளை அதிகமாய் ஆசிக்கிறீர்களா என்று அறியவிரும்பினேன். நீங்கள் மூவரும் லௌகீக காரியங்களிற்தான் நாட்டங்கொண்டிருக்கிறீர்களெனக்கண்டு துக்கப்படுகிறேன். "முதல் சர்வேசுரனுடைய இராச்சியத்தையும், அவருடைய நீதியையுந் தேடுங்கள். அப்போது மற்றெல்லாம் உங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத். 6:23.) என்று இரட்சகராகிய ஆண்டவர் வசனித்தவாக்கியத்தை மறந்துபோனீர்கள். "இவ்விதசத்தியங்களைத் தன்பிள்ளைகளுக்குப் படிப்பிக்கிறமாதா ஆசீர்வதிக்கப்பட்டவள். இந்த உத்தம படிப்பினைகளை மனதில் அவதானப்படுத்தி அனுசரிக்கிற கிறீஸ்தவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியவான்"என்றுசொல்லி முடித்தார்.

அந்தமூன்று வேலைகாரரும் தாங்கள் அன்றுபடித்துக்கொண்ட பாடத்தையோசித்துக்கொண்டு பேச்சுமூச்சில்லாமல் வெளியேவிலகினார்கள். பத்தியும் புத்தியுமுள்ள வாலிபன் முழந்தாளிலிருந்து தனக்கும் தன்மாதாவுக்கும் மேற்றிராணியாருடைய ஆசிர்வாதம்பெற்றுக்கொண்டுபோனான்.

ஸ்ரீமதி
மரியம்மா பொன்னையாவின்
2-ம் வருட
மரணஞாபகம்

பிறப்பு: 8—11—1904 இறப்பு: 27—6—1956

ஸ்ரீமதி மரியம்மா பொன்னையா அவர்கள் மரணத்திரையுள்மறைந்த 2-ம் வருடநிறைவு ஞாபகதினம் வருகிற 27-6-58 வெள்ளிக்கிழமை பூர்த்தியாவதால் அன்றுகாலை 5-30 மணிக்கு அன்னவரின் ஆன்ம சாந்திக்காக அர்ச். யுவானியார் கோவிலில் ஓர்துக்கப்பாடற்பூசை நடந்தேறும்.

இதை வாசிக்கும் சகலரும் இவ்வுடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி தயவுடன் வேண்டுகிறோம்.

"ஆண்டவரே! உம்முடைய தயவை முன்னிட்டு உமது அடியாளாகிய மரியம்மா பொன்னையாவின் ஆத்துமத்தின் பேரில் கிருபை கூர்ந்தருளும்."

"நித்திய இளைப்பாற்றியை அவவுக்குக் கொடுத்தருளும் சுவாமி; முடிவில்லாத பிரகாசம் அவவுக்குப் பிரகாசிக்கக்கடவது; சமாதானத்தில் இளைப்பாறுவாவாக."

இவவை இழந்து துயருறும்
பிரிய பத்தாவும், பிள்ளைகளும்

ஆஸ்பத்திரி ரோட்,
யாழ்ப்பாணம்.

அறிவித்தல்

நல்லூர் கிராம எல்லை நிர்வாகஸ்தரால் கருணைநிதி ரோட்டுவேலை செய்வதற்கு 1958-ம் ஆவ ஆடி மீ 12-ம் தேதி சனிக்கிழமை காலை 12 மணிவரையும் ரூபா 10,000 மேல் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரரிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ரூபா 50| ஷை கந்தோரில் கட்டியதின் பேரில் உத்தியோகபூர்வமான கேள்விப்பத்திரம் 1958-ம் ஆவ ஆடி மீ 1-ந் தேதி தொடக்கம் 5-ம் தேதி வரையும் வழங்கப்படும். விபரங்கள் ஷை கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

A. A. யோசப்,
நிர்வாகஸ்தர்,
நல்லூர் கிராமஎல்லை,
யாழ்ப்பாணம்.

உலோபி எறிந்த ரொட்டி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வின்முன்பாசத் தொங்கிக்கொண்டிருப்பதைக்கண்டு, மிகவருத்தமுற்று "ஆ! ஏழையொருவன் என துஞாபகமாக அதை வைத்துக்கொண்டிருக்க நான்பாத்திரமற்றவனாய் இருக்கிறேனே"யென்று கவலைப்பட்டான்.

ஆனால், அன்றிரவு அவன் வேறோர் கனவுகண்டான். அதிலே சூரியனைக் காட்டிலும் அதிக பிரகாசமொருங்கிய ஒருஉருவம் அவனுக்குத்தோன்றிற்று. அன்றுகாலை தான்பிச்சைக்காரனுக்குக்கொடுத்தபோர்வை அதன் தோள்களில் இருக்கக்கண்டான்

காட்சி அவனைநோக்கி, "இராயப்பா! ஏன்விசனப்படுகிறாய்? பார், நீ எனக்குக்கொடுத்த போர்வை; நாம் உன்னுடையஆண்டவர்"என்று வசனித்து மறைந்துபோயிற்று.

இந்தழறை நித்திரைவிட்டெழுந்த போது இராயப்பன் தனதுஆஸ்திமுழுவதையுமே ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டதுமன்றித் தனதுவழக்கறிஞரிடம்போய், "என்னைத்தானே அடிமையாகவிற்று அதனால்வரும்பணத்தை ஏழைகளுக்குப் பங்கிட்டுக்கொடுக்க ஆசிக்கிறேன்"என்றான்.

வழக்கறிஞரும் அதற்குச் செய்யவேண்டியதைச்செய்து விற்றுவந்த பணத்தைத் தர்மத்தில்செலவழிக்க உதவிசெய்தார். இராயப்பன் தன்னை அடிமைகொண்ட எசமான்வீட்டில் மிகஇழிவான வேலைகளெல்லாம் செய்துவந்தான். ஆயினும், அந்தப் பொல்லாதஎசமான் அடிக்கடிஅவனை அடித்துத் துன்பப்படுத்தினான். நமது திவ்விய கர்த்தர் சமையாசமையம் மூன்பு பிச்சைக்காரனுக்குக் கொடுக்கப்பட்ட போர்வையுடன் இராயப்பனுக்குத் தரிசனம்அளித்தார். அதனால், இராயப்பனுக்கு மனம்திருப்தியாய் இருந்தது.

ஒருநாள் அவனுடையஎசமான் ஒரு பெரிய விருந்துகடத்தினான். அதில் இராயப்பனும்உணவுகள்கொண்டுவந்து வைக்கும் பணிவிடைகாரரில் ஒருவனாயிருந்தான். அப்போது விருந்தினரில் ஒருவன் தனதுஅயலானிடம் இராயப்பனைச் சுட்டிக்காட்டி, "இந்தஅடிமை வங்கிக்காரஇராயப்பனின் சாயலாய் இருக்கிறானல்லவா?" என்றுகேட்டான். மற்றவன்அதற்கு, "ஆமாம், சாயல் சரியாயிருக்கிறது" என்றுசொல்லி மறுபடியும் அந்தப்பணிவிடைகாரனைக் கவனித்தான். உடனே "ஆம், இராயப்பன்தான்; நான்எழுந்து அவருக்கு மரியாதைசெய்யப் போகிறேன்" என்று சொல்லி ஆசனத்தைவிட்டு எழுந்தான்.

ஆயினும், இராயப்பன் அதன்மேற் பணிவிடைசெய்யவில்லை போசனசாலையைவிட்டு வெளிகொண்டான். தெருவாயிற்படியிலே காவல்காத்துக்கொண்டிருந்தவன் பிறப்பிலேயே ஊமையும், செவிடுமானவன். இராயப்பன் அவனைநோக்கி, "என்னைவெளியே போகவிடு"என்று கேட்டபோது, அவன் தன்செவிகளால் இராயப்பன்கூறியதை நன்றாய்க் கேட்டு உடனேகதவைத் திறந்துவிட்டான். அதேசமையம் அவனுக்குப் பேச்சும்உண்டாயிற்று.

பிறகு வாயில்காப்போன் போசனசாலைக்கு ஓடிச்சென்று தனதுஎசமானையும், மற்றவர்களையும்பார்த்து வாய் திறந்து தன்விஷயமாய் நடந்தஅதிசயத்தை விபரமாய்ச்சொன்னான். எல்லோரும் சொல்லமுடியாத ஆச்சரியப்பட்டார்கள். அப்படியானபுதுமையைச் செய்தஆளை எங்கும்தேடினார்கள். ஆயினும், முன்னைநாள் வங்கிக்காரஇராயப்பன் அகப்படவில்லை.

பிறகுஇராயப்பன் மரணமடைந்து உள்ளபடியே நீதிஆதித்தனை தேவனுடைய சந்நிதானத்தில்போய் நின்றபோது, நீதியின்தராசில் சம்மனசுகளால் வைக்கப்பட்ட பாரத்தைக் தாங்கிக்கொண்டிருந்த தட்டானது பிசாசின்தட்டைச் சுலபமாய்த் தூக்கியடித்து விட்டதென்றுசொல்லத் தேவையில்லை.

Educational (Girls Only)

For Commercial Certificate and Shorthand-Typists Examinations contact

M. M. Thuraisingham.

20, Third Cross Street,
Jaffna.

உலகிலே உன்னத ஸ்தானத்தில் திகழும்

றேடியோ

ஒன்றை வாங்கித் திருப்தியடையுங்கள்!

ஏனெனில், அது முற்றிலும் புதுமையானது. ஒவ்வொரு 'ஏறஸ்' றேடியோவும் திறமையான சேவையாளரால் உருவாக்கப்பட்டது. அதன் நீண்டகால சேவையே அதன் வெற்றிக்கு ஆதாரம்.

இதன் விசேஷ அம்சங்கள்:

- கவர்ச்சிகரமான தோற்றம்
- இனிமையான சத்தம்
- உறுதியான அமைப்பு
- டச் தயாரிப்பு

விற்பனையாகும் றேடியோக்கள் யாவும் உத்தரவாதம் உடையன.

உங்கள் றேடியோப் பிரச்சினை எதுவாயிருப்பினும் றேடியோத் துறையில் பலவருடகால அனுபவம் வாய்ந்தவரான திரு. எஸ். ஜே. மனுவல்பிள்ளை அவர்களுடன் கலந்துகொள்ளுங்கள்.

விற்பனையாளர்:

எஸ். ஜே. மனுவல்பிள்ளை,
றேடியோ சேல் அன் சேர்விஸ்
6, மருதடிரோட், சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

MODERN SCHOOL OF NEEDLECRAFT & HANDICRAFT

Scientific Dress Making **Machine Embroidery**

Class commence 1st July.

For further particulars contact **Miss A. J. Saverimuttu,**
57, 4th Cross Street,
Jaffna.

பாத்திமா திருசேத்திர யாத்திரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர். இந்தத்திருச்சபைச் சொத்துகள் தற்போது பாத்திமாதிருசேத்திரமென அழைக்கப்படுகிறது. இது பெரிதும்மாட்சிமை வாய்ந்த திருச்செபமாலை மகாதேவாலயத்தையும், யாத்திரிகர் விடுதிகளையும், நோயாளரின் ஆஸ்பத்திரிகளையும், வேதச்சாமான்கள் வாங்கக்கூடிய பண்டகசாலை ஒன்றையும் அடக்கியுள்ளது.

திருசேத்திரத்தின் மத்தியில்

தேவதாயார் எழுந்தருளிக் காட்சியளித்தமரம்நின்ற—அதாவது பைந்தருவாகிய அந்தச் சிந்தூரமரம் நின்ற இடத்திற்கு மேலாக ஒட்டினல்வேய்ந்தஅலங்காரமற்ற சிறியகட்டடம்ஒன்று திருசேத்திரத்தின் மத்தியில் இருக்கின்றது. திருசேத்திரத்திற்குவெளியே திரளான விருந்தினர்சாலைகளும், போசனசாலைகளும் இருக்கின்றன. சந்நியாசகுருமார்சபைகளும், கன்னிகாசபைகளும் கோவாடாஈறியாவிலே கடந்தசிலவருடங்களில் தங்கள் கிளைமடங்களைத் திறந்திருக்கின்றன. அங்கு காட்சிபெற்ற ஞாசியாவுக்கும், அவள்மைத்துனரும், மைத்துனியுமான பிரான்சிஸுக்கும், ஜாசிந்தாவுக்கும் அறியப்பட்டிருந்த கோவா டா ஈறியாவிலேயாத்திரிகர்களுக்குக் குறிப்பிடக்கூடியதாய் யாதொன்றுமே தற்போது விடப்பட்டில்லை சிலவருடங்களுக்குமுன்பு வரை ஓர்சிறுதுண்டுநிலம் முன்னிருந்தவாறு இருக்கவிடப்பட்டிருந்தது. ஆனால், தற்போது முழுப்பகுதியுமே காங்கிறீற்றால் மூடப்பட்டு அங்குவரும் லட்சக்கணக்கான யாத்திரிகர்களுக்கு இடவசதிசெய்யப்பட்டிருக்கிறது.

(தொடரும்)

ஊரடங்குஞ் சட்டநேரம்

நிகழும்ஆனிமாதம் 22-ந்திகதியாகிய வருகிறஞாயிற்றுக்கிழமை இரவு முதல் ஊரடங்குஞ்சட்டநேரம் இலங்கைமுழுவதும் மேலும் 2மணித்தியாலத்தால் குறைக்கப்படும்; அதனால் ஊரடங்குஞ்சட்டநேரம் அன்று பிற்பகல் 8மணிமுதல் காலை 4மணிவரையும் இருந்துவருமென்று தகுதிவாய்ந்த அரசாங்கஅதிகாரிஒருவர் சென்றசெவ்வாய்க்கிழமை தெரிவித்திருக்கின்றார்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 19-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org